
# போர்வாள்

வாள் 4

## நடராசர் நடனம்-பக்தர் பரவசம்!




"பெரிய தொழிற்சாலைகள் அனைத்தையும் சர்க்காரே எடுத்து நடத்த வேண்டும் என்ற உத்தேசம் எங்களுக்குச் சிறிதும் கிடையாது. உலகத்தில் எந்த சர்க்காராலுமே நடத்த முடியாத காரியம் அது."

—அமைச்சர் பக்தவச்சலனாரின் சென்னைச் சொற்பொழிவு

ஆசிரியர்கள்:- காஞ்சி, மணிமொழியார். மா. இளஞ்செழியன், B.A.(HONS)

விலை 2

Best copy available.

தொடர்கதை:

# மிராசுதார் மகள்

காஞ்சி. கல்யாணசுந்தரம்

(4—11—50 தொடர்ச்சி)

நெடுமாறனைப் பள்ளிக்கு அனுப்பாதது பற்றி, அவனுடைய தாய் வேலைக்காரி வேதத்திற்கு மிராசுதார்மீது அணுவத்தனையும் கோபம் கிடையாது. படிப்பின் முக்கியமும் அவளுக்குத் தெரியாது. அவளும் படித்தவள் அல்ல. பாடுபட்டுப் பிழைத்தாகவேண்டிய ஏழைக்குப் படிப்பு அவசியமில்லை என்பது வேதத்தின் முடிவு. இந்த முடிவு தான் சரியானது என்று அடிக்கடி வற்புறுத்திக் கூறிவந்தார் மிராசுதார் முதலியார்,

பிரம்மபுரி தொடக்கப்பள்ளியில் இனி படிக்க வேண்டிய படிப்பு எதுவும் கிடையாது. எனவே தொடக்கப்பள்ளியை விட்டு விலாசவதி விடைபெற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. விலாசவதியை மேலும் படிக்கவைக்க வேண்டுமென்பது மிராசுதாரின் ஆசை. ஏகாம்பர அய்யருக்கும் அதே ஆசைதான். இதில் முடிவு காண்பதற்காக, அய்யரும், முதலியாரும் கலந்து யோசித்தார்கள். செங்கல்பட்டிலுள்ள, தனது மைத்துனர் ஜீவகாருண்ய முதலியார் வீட்டில் தங்கி விலாசவதி மேலும் படிக்கவேண்டுமென்பது மிராசுதாரின் விருப்பம். ஆனால், அய்யருக்கு இது பிடிக்கவில்லை. மிராசுதாரின் ஏற்பாட்டால், தனது பையன் பதஞ்சலியின் படிப்புக்குக் காதுடைந்த ஊசியளவும் நன்மை ஏற்படாது என்பதை அறிந்த அய்யர் வேறு முடிவு கொண்டுவிட்டார்; சென்னை நகரிலேயே விலாசவதியைப் படிக்க வைப்பது நல்லதென்றும், அங்கு தனது மூத்த மகன் சேதுராமன் வீட்டில் சாப்பாடும் தங்கலும் வைத்துக் கொள்ளலாம் என்றும் துணைக்கு பதஞ்சலி இருக்கிறான் என்றும் ஏகாம்பர அய்யர் மெள்ள மிராசுதாரிடம் விஷயத்தை விளக்கினார். அய்யரின் தூண்டுதலின்பேரில் வேதம்மாளும், அய்யர் யோசனைப்படி மிராசுதாரை நடக்குமாறு தூபமிட்டாள். வேதம்மாளின் வற்புறுத்தலுக்கு அய்யரின் தூண்டுதல் ஒன்றுமட்டுமே காரணம் அல்ல. மிராசுதார், தப்பித்தவறி, விலாசவதியை, படிப்பதற்காக, செங்கல்பட்டிலுள்ள தனது மைத்துனர் ஜீவகாருண்ய முதலியார் வீட்டுக்கு அனுப்பிவிட்டால், அதனை ஒரு வாய்ப்பாகக் கொண்டு, செங்கல்பட்டார் மிராசுதார்மீது ஆதிக்கம் செலுத்தும் நிலை ஏற்பட்டாலும் ஏற்படக்கூடும் என்பது வேலைக்காரி வேதத்தின் நினைப்பு. அத்தகு நிலையில் எங்கே மிராசுதார், தன்னை வெறுத்து ஒதுக்கி விடுவாரோ என்ற பயம், விலாசவதியைச் சென்னைக்கே படிக்க அனுப்புமாறு, அய்யருடன் ஒத்துழைக்கச்செய்தது.

ஏகாம்பர அய்யர் குமாரன் சேதுராமன் வீட்டில் விலாசவதி தங்கி இருந்து மேலும் படிப்பைத் தொடர்வது என்ற முடிவிற்கு வந்தார் மிராசுதார். இதனால் மிராசுதார் செல்வி லேயே பதஞ்சலியும் சென்னையில் படிக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. சேதுராமன் குடும்பத்தை. நீண்டகாலமாகப் பிடித்து வாட்டி வதைத்துக்கொண்டிருந்த வறுமைக்கும் இறுதி காலம் சம்பவித்துவிட்டது.

பதஞ்சலியின் படிப்பு, சேதுராமனின் வறுமையைப் போக்குதல் ஆகிய இரண்டு காரணங்களைத் தவிர, கணக்குப்பிள்ளை ஏகாம்பர அய்யருக்கு வேறு காரணம் ஒன்றும் இருந்தது, மிராசுதார் மகள் விலாதவதியை தன் கட்டளைக்குக் கீழ்ப்படிகிறவர்கள் அரவணைப்பிலேயே வைத்துக் கொண்டு இருக்க வேண்டும் என்பதற்கு. அதுவே முக்கிய காரணமும் ஆகும்.

விலாசவதியிடம் புதிய கருத்துகள் புகுவதை ஏகாம்பர அய்யர் அறவே வெறுப்பவர். அவள் சமரச ஞானம் பெறுவது அய்யருக்குக் கொஞ்சமும் திருப்திஅளிப்பதாகஇல்லை. மனிதராகப் பிறந்தவர்கள் அனைவரும் சமம் என்ற உயர்ந்த கோட்பாடு, விலாசவதியின் இளம் உள்ளத்தில் இடம்பெற்று வருவது அய்யருக்குப் பிடிக்கவில்லை. கல்லிலும் செம்பிலும் கடவுள் இருக்காது என்ற மெய்யறிவு எங்கு மிராசுதார் மகளையும் பிடித்துக் கொள்ளுகிறதோ என்ற அச்சம் அய்யருக்கு நீண்ட நாட்களாக உண்டு: சிலை வணக்கத்தில் மட்டற்ற நம்பிக்கையும், சனாதனதர்மத்தில் அளவு கடந்த ஆசையும், பிராமண பக்தியில் குறையாத ஆர்வ

(10-ம் பக்கம் பார்க்க)

# போர்வாள்

[ திராவிடர் வார வெளியீடு ]

| வாள் 4 | திருவள்ளுவர் ஆண்டு 1981 கார்த்திகை 3<br>18—11—50 சனிக்கிழமை | வீச்சு 12 |
|---|---|---|


# அமைச்சர் அளித்த அறிவுரைக் கொத்து!

அதோ தெரிகிறதல்லவா ஒரு மாளிகை—ஆமாம்—அண்ணாந்து பார்த்தால், கழுத்து, அரைநாள் வலிக்கும் அளவு, ஓங்கி உயர்ந்திருக்கிறதே அந்த அலங்கார மாளிகைதான்—வகை வகையான நிறங்களில் விதவிதமான ஓவியங்கள் தீட்டப்பட்ட அழகழகான திரைச் சீலைகளைச் சுவர்தோறும் தொங்கவிட்டிருக்கும் அதே மாளிகைதான்—நீண்ட துப்பாக்கிகளைத் தம் நெடுங்கரங்களில் ஏந்தியவண்ணம், நெட்டைப்பனைகள என நின்றபடி இருக்கிறார்களே நான்கு கூர்க்கக் காவலாளிகள், அந்த மாளிகையைத்தான் குறிப்பிடுகிறோம்-அந்த மாளிகைக்குள் நுழைந்தால் அலங்காரமானதோர் கூடமிருக்கும். கூடத்தின் நடுவே, கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் சோபாக்கள் பலபல போடப்பட்டிருக்கும. அவற்றிலே ஒன்று, மிகச் சிறந்த வேலைப்பாடு அமைந்ததாகவும், சுற்றிலும் மணம் வீசும் மலர்கள் நிறைந்ததாகவும், அந்த மலரினும் மெல்லிய பட்டாடையால் போர்த்தப் பட்டதாகவும் இருக்கும். அந்த அதி அலங்கார சோபா மீது, அனுபசமாக வீற்றுக்கொண்டு, முறுக்கிவிட்ட மீசையை மேலும் முறுக்கிவிட்டுக்கொண்டும், வெள்ளிப் பூண் இட்ட கைத்தடியைத் தரைமீது ஓங்கி ஓங்கித் தட்டிக்கொண்டும், ஓடி ஓடிப் பணியாற்றும் உழைப்பாளிகளை சீக்கிரம்—சீக்கிரம் என்று முடுக்கிக்கொண்டும், மெள்ளப் பணியாற்றும் பண்புடையார் மீது ஆத்திர அனலை அள்ளி வீசிக் கொண்டும் இருக்கிறாரே அவர்தான் அந்த மாளிகை வாசி—பிரபல ஜமீன்தார்

அவருடைய கைகளைப் பாருங்கள்—அங்கே பச்சைக் கல் மோதிரங்கள் பளபளக்கும். அவருடைய காதுகளைக் கவனியுங்கள்—வைரம், 'டால்' வீசும். அவருடைய வேட்டியை நோக்குங்கள்—உயர்தா சரிகை ஜொலிக்கும். அவருடைய கோட்டு—ஆம், அது ஒன்றே ஆயிரம் ரூபாய் பெறும். அவர் எழுந்து நடக்கிறபோது அவரைக் கவனியுங்கள்-டாஜ்மகால், உயிர் பெற்றெழுந்து உல்லாசப் பவனி வருவது போலிருக்கும்—நாலாபுறமும் ஒளி வீசும்—அந்த அளவுக்குப் பொன் காய்த்த மரமாக இருப்பார், ஜமீன்தார். அவர் மேனியை அலங்கரித்துக் கொண்டிருக்கும் நகைகளைத் திரட்டினால் ஒரு சிறு ஷாப் கடை வைத்துவிடலாம்—அவ்வளவு நகைகள் அவர் உடலை முத்தமிட்டுக் கொண்டிருக்கும்.

அவருக்கு இந்தப் பக்கம் வீற்றிருக்கிறார்களே வரிசை வரிசையாக, அவர்கள் அத்தனை பேரும் அவருடைய கணக்கப் பிள்ளைகள். அவருக்கு அந்தப் பக்கம் இருக்கிறார்களே—இருக்கிறார்களே என்று சொன்னேனா? தவறு! தவறு! எழுந்தருளியிருக்கிறார்களே ஏழெட்டுப் பேர்—அவர்கள், ஐயர், ஐயங்கார், சாஸ்திரி, சர்மா—இத்யாதி இத்யாதி, அதாவது, ஜமீன்தாரின் அந்தரங்க ஆலோசனையாளர்கள்!

அங்கே வீற்றிருக்கிற அந்தக் கணக்கப்பிள்ளைகளையும் அய்யர்—அய்யங்கார்களையும் எண்ணிப் பார்த்தாலே தெரிந்துகொள்ளலாம் ஜமீன்தாரின் இராஜ்யம் எவ்வளவு பெரிதாக இருக்க வேண்டும் என்பதை.

அதிகம் வளர்த்துவானேன்-ஜமீன் நிலம் பிரம்மாண்டமானதுதான்—ஜமீன்தார் சொத்தும் ஏராளம் தான்—அவருக்கு இருக்கும் ஆள் அம்புகளும் அமோகம்தான் — அவருடைய அலங்கார மாளிகையும் அதி அற்புதமானதுதான் — அவருடைய உருவமும், அவ் உருவத்தை விட்டுப் பிரியாதிருக்கும் நகைகளும், அந்த நகைகளிலிருந்து வீசும் ஒளியும், அவர் ஒரு பிரபல ஜமீன்தார் என்

(6-ம் பக்கம் பார்க்க)

# கட்டைவிரல்-ஒரு சோக சம்பவம்!

(ஆ. பெ. நாராயணன்)

"குரு பக்தி"யால் கட்டை விரலைக் காணிக் கையளித்தோனின் கதை இது. காணிக்கை அளித்த இளைஞனின் ஏமாளித்தனம், வேம் பென அவனை வெறுத்த வில்வீரர் துரோண ரிடம் குடிகொண்டிருந்த வன்னெஞ்சம், அர்ஜு னனின் அடங்காப் பெருமை இவைகளை இக் கதை கூறும்.

* * * *

"வில்வித்தை! வேடருக்கு ரிய கலை! எந்தக் கலையும் ஆசிரிய ரின்றி விருத்தி பெறுது. உகந்த ஆசிரியரைத் தேட வேண்டும்!".

அத்தினபுரத்தை அடுத்த காட்டிலே, வேடர் கூட்டத் தலைவன் ஏகலைவன், மேடையி லமர்ந்து இம்மொழி கூறினன். சுற்றிநின்றவர்கள் தமக்குள் சிறந் தவர்களைப்பொறுக்கிமுன்நிறுத் தினர் "இவர்களில் ஒருவரை ஆசிரியராக நீங்கள் அமர்த்திக் கொள்ளலாம்" என்று வழி கூறி ஞன் ஒரு வேடன். முன் நின்ற அவர்களை உற்று நோக்கினன் ஏகலைவன். "கரியநெடு உருவங் கள்! கனத்த தோளுடையோர் கள் இவர்களிடம் வீரம் இருக்குமே தவிர, விற்போருக் குரிய விவேகமிருக்காது!" தனக்குள் எண்ணினன். உரக்கச் சிரித்தான் உடனிருந்தோரின் அறியாமையை நினைந்து. "இவர்களா!"-இன்னும் சிரிப்பு அவனை விடவில்லை. "ஏன்?" என்றனர் அனைவரும். வேடர் தலைவன் எழுந்தான்,

"அன்பர்களே! நமக்குள் ளிருக்கும் நல்ல வீரர்களைத் தேர்ந்தெடுத்தீர். மகிழ்ச்சி! ஆனால் காட்டில் திரிந்து, கழுகை யும், கடும் புலியையும் குறி பார்த்துக்கொல்லும்திறனுடைய இவர்கள் போருக்குரிய பயிற்சி யற்றவர்கள். களிற்றுப் படைக ளும்காலாட்படைகளும்சூழ்ந்து எதிர்த்துவர, எப்புறம் அம் பெய்தால் எதிரிகள் அயர்வர் என்ற சூழ்ச்சி தெரியாதவர்கள். ஆக எனக்குப் "போர்முறைப்" பயிற்சி தரும் ஆசிரியர் தேவை!" என்ருன்.

வழி கூறினேர் இதழ் பிதுக் கினர், தலையாட்டினர் 'கடினம்'என்பதற் கறிகுறியாக. முடிவில் ஒருவன் முன்வந்தான். கிழவன். நெடுங்காலம் காட் டில் வாழ்ந்தவனதலால் வேட் டையாட வரும் அரசர்களைக் கண்டவன்.

"தலைவ! அத்தினபுர அரண் மனையில் உள்ள துரோணரென் னும்வேதியர் வில்வித்தை வல்லு னராவார். வீரமிகுந்த அர்ஜுன னென்பான் அவர் சீடனே. அவரை அண்டினல்....!" என்ருன்.

"சபாஷ்! சிறந்த யோசனை! இந்தக் காட்டுக்கு அவர்கள் வரும் சமயம் வேண்டிய உதவி செய்து என் கோரிக்கையையும் ஈடேறச் செய்யலாம்!"

"ஆனல் அவர் அரசவை ஆசிரியர்!"

"அதனலென்ன? நாட்டு மன்னன் பொன்னைத் தருவான். காட்டு மன்னன் நான், பொரு ளைத் தருவேன். மூங்கில் தரு வேன் முறியாத விற்கள் செய்ய. தேக்கு தருவேன் தகுந்த ரதங் கள் செய்ய. போருக்கான வீரர் தருவேன். ஏன்? என்னையே தருவேன். இதைவிட....!"

"அவர் வேதியர் என்பதை நீர் மறக்கக் கூடாது!"

"கலையளிக்க பேதமா! அறிவு டையார் சாதியைப் பாரார். முயற்சிப்போம்!"

கிழவனின் ஐயப்பாடுகள், கலையையே நாடிநின்ற வேட னின் சொல்லம்புத் திறத்தால் விலக்கப் பட்டன. எனினும் அவனுடைய கேள்விகளில் உண்மை யிருந்ததை ஏகலைவன் உணராமலில்லை. அவன் உள்ளம் விற்போர்க் கலையில் வீழ்ந்து கிடந்தது. "வேதிய ராயிற்றே! சாதியை ஆராய் வாரே! வழியொன்று செய் வோம்!" என்று அவன் தந்திர முறையில் திரும்பவுமில்லை. தன் வனத்துக்கு வேட்டையாட வரும் மன்னர்களிட மெல்லாம் உறவாடி, உதவி புரிந்து வந்தான். இவர்களில் யாரேனும் துரோண ராக இருக்க மாட்டார்களா என்ற சபலம்.

ஓர்நாள். வனமே போர்க் களமாகக் காட்சி யளித்தது. உயிருக்காக ஓடும் சிங்கங்கள், அவைகளிட மிருந்து தம்மைக் காக்க ஓடும் பிற மிருகங்கள், பரிதாப ஓல மெழுப்பும் புலிகள், பதுங்கும் நரிகள், வட்டமிடும் வல்லூறுகள் இவை வேட்டை யாடவந்தோரின்வீரத்தை விளக் கின. குகையினின்றும் வெளிப் பட்ட ஏகலைவன் இக் காட்சி யைக்கண்டான். அவன் உள்ளம் துள்ளியது மகிழ்ச்சிப் பெருக்

கால், காட்டையே கலக்கும் அன்றைய வேட்டைக்காரர்கள், கட்டாயம், துரோணர் தலைமையில்தான் வந்திருக்க வேண்டும் என்ற அழியாத நம்பிக்கை அவனுக்கு. "விர்" ரெனப் பறந்து வந்த ஒரு அம்பு எதிர் நின்ற மாமரத்தைத் துளைத்து அதில் நின்றது. வேகமாக ஓடி, அம்பைப் பற்றிப் பார்த்தான் வேடன். அதில் காணப்பட்ட எழுத்துக்கள். அ...த்...தி...னா...பு...ர....ம். ஊர்ப் பெயர் மட்டுமல்ல, அவன் உள்ளம் தேடிய பெயரும் அதுதான். இடைச் செருகிய கொம்பை எடுத்தூதினான். அது வனமெங்கும் எதிரொலித்தது. ஆட்கள் குவிந்தனர். அணி அணியாக நின்றனர்.

"அன்பர்களே! நெடுநாளைய என் விருப்பம் —நீங்களறிந்தது— இன்று முடியப் போகும் நாள். அஸ்தினாபுர அரசவையினர் வனம் வந்துள்ளனர். அவசியம் என் ஆசிரியர்......ஆம். என் ஆசிரியர் துரோணரும் வந்திருப்பார். புறப்படுங்கள்! கனிகளைக் குவியுங்கள்! மலர்களைப் பறித்து மாலைகளைக் கட்டுங்கள்! சந்தனக் கட்டைகளைக் கொளுத்தி நறுமணப் புகை உண்டாக்குங்கள்! தேர்ந்த நாட்டியக் குழுவொன்றும் தயாராகட்டும்! அரசவை சுகபோகம் மிஞ்சுமளவுக்கு நம் வனபோகம் விளங்கவேண்டும். உம்...!"

ஆணை பறந்தது. ஆட்கள் பறந்தனர் அதைப்போல. சில நாழிகைக்குள் கூடைகளில் கனிகள், குடத்தில் தேன், கைகளில் மாலைகள், சந்தனத் தீக்கட்டைகள் சகிதம் பெரும் படை ஒன்று, நாட்டியமாடுபவர்களையும் உடன் அழைத்துக் கொண்டு புறப்பட்டது.

வேட்டையாடிய களைப்பினால் சோர்ந்து கிடந்தனர் அஸ்தினாபுரத்தவர். கூடாரங்களின் புறத்தே கொல்லப்பட்ட மிருகங்கள் குவிக்கப் பட்டிருந்தன. அவைகளில் பல உண்டித் தயாரிப்புக்கு உதவியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டு தனியே வைக்கப்பட்டிருந்தன. கொன்ற மான் ஒன்றைக் கையில் பிடித்து நின்றார் வில்வீரர் துரோணர்.

"அர்ஜுனா! உன் வில்திறம் கொடுத்த விருந்து...!"

"மான்தானே சுவாமி! இன்று மதுவும் மானிறைச்சியும் தான் உணவு."

"அதைச் சொல்லவில்லை நான். ஒரே பாணம், பாய்ந்தோடிய மானைப் பல இடத்தில் குத்திவிட்டதே, அந்தக் காட்சி விருந்தைச் சொன்னேன்."

"எந்தப் புகழும் உம்மையே சேரும்! நான் சீடன்...!"

பணிவோடு சிரம்தாழ்த்தி நின்ற அர்ஜுனனை "ஜெயவிஜயீபவ!" என்று வாழ்த்தினார் துரோணர். இதற்குள் வேடர் பெரும் படை வந்து சேர்ந்தது. தொலைவிலிருந்தே, கை தூக்கி சீடனை வாழ்த்துபவர் துரோணர்தான் எனக் கண்டுகொண்டான் ஏகலைவன். முன்னிலும் வேகமாக அவனும், அவன் படைகளும், வரிசைகளும் வந்தன. மகிழ்ச்சிப் பெருக்கால் வில்லெடுத்து வானம் நோக்கிக் கணைவிட்டான் வேடுவன். வானிலே கணைபறந்து, ஒருமுறை சுற்றி, துரோணர் காலடியில் பணிந்து வீழ்ந்தது. அவர் திடுக்கிட்டார். கணை வந்த திசை நோக்கினார். வேடுவர்தம் படை விரைந்து வருவது கண்டார். காட்டரசன் படையெடுத்து வருகிறான் என்ற எண்ணத்தில் கொம்பு எடுத்து ஊதினான் அர்ஜுனன். அவன் படைகளும் குவிந்தன. வேடர் படை நெருங்கியது. "வாழ்க துரோணர்! வாழ்க அர்ஜுனர்! வாழ்க வில் வீரர்!" என்ற ஒலி வானைப் பிளந்தது. மறுமுறையும் வேடன் விட்ட மற்றோர் கணை குருவின் காலடியில் வணங்கி வீழ்ந்தது. வேடனுக்கிருந்த இந்தப் பணிவையும், திறமையையும் குருவும், சீடரும் போற்றினர். விரைந்து வந்த வேடுவ மன்னன் துரோணர் காலில் வீழ்ந்தான்.

"குருவே!"

"குருவா? யாருக்கு...?"

"விற்போர் நுணுக்கம் விழையும், எனக்கு. படைக்களப் "போர் முறை" அறியத் துணை புரிய வேண்டும்!"

"படைக்களப் போர் முறையா? உனக்கேனப்பா அதெல்லாம்? காட்டரசன் நீ! உன்னை எதிர்க்கப்போகின்றவர் நாட்டரசர் அல்லவே! உன்னை எதிர்த்துச் சீறி எழ இருப்பவை சிங்கப்படைகள், புலிக்கூட்டம் இவைகள் தாமே! இவைகளை எதிர்க்கவோ போர்முறைப் பயிற்சி! வேடுவனே! வேண்டாத எண்ணம். மேலும் நீ ஒரு சூத்திரன்!"

"சூத்திரன் தான் சுவாமி! ஆனால் குருபக்தியில் குறைய மாட்டேன். காணிக்கை தருவர் க்ஷத்திரியர். நான் என் உயிரையே தருவேன்!"

"உன் கலையார்வத்தை மெச்சுகிறேன். ஆனால் நீ இச்சை கொள்ளும் அந்தக்கலையை இந்தப்பிராமணத்துரோணனிடம் பெறமுடியாது. நீசகடை வகுப்பைச்சேர்ந்த உனக்குக் கலையளிக்க சாஸ்திரம் அனுமதி தரவில்லை! என்னால் முடியாது!"

"சுவாமி!" ஏகலைவன்— தொடர்ந்தான்

"தொடாதே! நான், சொல்மாறேன்!"

இரங்கிக் கேட்ட வேடனுக்கு இரக்கம் காட்டப்படவில்லை. அங்கு குலமும், நிலையும், குறுக்கு

(16-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பதை ஐயம் திரிபுக்கு இடமின்றி அழுத்தந் திருத்தமாகத் தெரிவிக்கும் ஆற்றல் படைத்தவைதான் — ஜமீன்தாருடைய பார்வையோ புயல், அவருடைய சொற்களோ வெடிகுண்டுகள், அவருடைய ஆத்திரமோ அணுக்குண்டு, அவருடைய கோபம் ஒரு பூகம்பம் என்றெல்லாம் கூறத் தோன்றும் அவரைப் பார்த்தால்— உண்மைதான் இதுவும்.

உண்மை! உண்மை! இவ்வளவும் உண்மை! யாரும் மறுக்க முடியாது இவற்றை! மறைக்கவும் முடியாது! மறப்பதோ ஆகாத காரியம்! ஆனால்—?

ஆனால் என்று இழுத்தாற்போல் பேசுகிறீரே என்ன காரணம் என்கிறீர்களா? காரணம் இருக்கிறது தோழர்களே, மிக முக்கியமான காரணம்!

ஜமீன்தாருக்கு சொத்து ஏராளமாக இருக்கிறது என்பது உண்மை — ஆனால் அவருக்கு இருக்கும் கடனோ, அதைவிட ஏராளம்!

அவருடைய உடலிலே, தங்கமும் வைரமும் ஒன்றுடன் ஒன்று போட்டி போடுகின்றன —மெய்தான் — ஆனால், அந்த உடலுக்குள்ளே தீராத நோய் ஒன்று புகுந்துகொண்டு, உடலை, மண்ணாக அரித்துவருகிறது. உடல், எந்த நேரத்திலும் பிணம் என்ற நிலையைப் பெற்றுவிடக்கூடும் —அவ்வளவு கேவலமான நோய்! அத்துணைப் பரிதாபம் நிறைந்த உடல்!

அவருக்கு இருக்கும் ஆள் அம்புகள் அமோகம் — இல்லை என்பார் இல்லை—ஆனால் ஒன்று —அந்த ஆயிரக்கணக்கானவர்கட்கும், கவனமாகப் படியுங்கள், மூன்று மாதங்களாக சம்பளம் கொடுக்கப்படவில்லை.

அவரைச் சுற்றிலும் கணக்கப்பிள்ளைகள் ஒரு பட்டாளம் போலத்தான் இருக்கிறார்கள்! அய்யர் அய்யங்கார்களும் ஏராளமாகத்தான் இருக்கிறார்கள்! இருக்கிறார்கள் — ஆனால் ஏன் இருக்கிறார்கள் தெரியுமோ —எரிகிற வீட்டில் பிடுங்கியவரை இலாபம் என்ற பழைய மொழிக்குப் புதிய உதாரணம் தேட! அதாவது மூழ்கிக்கொண்டிருக்கும் ஜமீன் சொத்தை, அகப்பட்டவரையில், தம்முடைய சொந்த சொத்தாக மாற்றி அமைத்து மறுகோலம் செய்துக்கொள்ள!

ஜமீன்தார் பார்வையிலே புயல் இருக்கத்தான் செய்கிறது! ஆனால் அது கஷ்டப்பட்டு வரவழைத்துக் காட்டப்பட்ட போலிப் புயல்! உண்மையில் அந்தப் புயல், புயல் அல்ல— பெருமூச்சு!—உள்ளத்தை உளி கொண்டு தாக்கும் ஓராயிரம் வேதனைகளின் கூட்டுத்தொகை!

ஜமீந்தார் பேசுகிறபோது, சொற்கள், வெடிகுண்டுகளைப் போல;ப் பயங்கரவடிவம்;கொள்வது பொய்யல்ல, மெய்தான்! ஆனால் அந்தப் பயங்கர வடிவம், உள்ளே இருக்கும் கண்ணீர்க் கோட்டையை மறைப்பதற்காகக் கையாளப்படும் தந்திரம்— வெறும் வாணவேடிக்கை—ஒரு சிறு முகமூடி — அவ்வளவுதானே தவிர உண்மையின் உருவமல்ல!

ஜமீன்காருடைய மாளிகை, அலங்கார தீபிகையாகத்தான் இருக்கிறது — அதன் ஒவ்வொரு பகுதியிலேயும், அழகு, ஆநந்தத் தாண்டவம் புரிந்தபடிதான் இருக்கிறது — சொகுசு, அந்த மாடமாளிகையின் சொந்த சொத்தாகத்தான் இருக்கிறது — கண்ணுள்ளோர் எவரும் காணக்கூடிய உண்மைகள்தான் இவை—ஆனால் கருத்துள்ளோர் மட்டுமே காணக்கூடிய வேறோர் உண்மை இருக்கிறது — மிக முக்கியமான உண்மை — அந்த அலங்கார மாளிகை, அடுத்த மாவட்டத்து ஜமீன்தாரிடம் அடகு வைக்கப்பட்டு, ஆண்டுகள் ஆறு முடிந்துவிட்டன.

அத்திப் பழத்தைப் பிட்டுப் பார்த்தால் அத்தனையும் சொத்தை என்பதைப் போல, ஜமீன்தாரின் வாழ்வைத் தட்டிப் பார்த்தால், அவ்வளவும் ஓட்டை!

அலங்காரமான மணிபார்ஸ்தான் ஆனால் உள்ளேயோ ஒரு சல்லியும் இல்லை என்பதைப் போல, உடுத்தியிருப்பது உல்லாசமான பட்டுச் சட்டைதான்-ஆனால் சட்டைக்குள் இருப்பதோ தொழு நோயால் பீடிக்கப்பட்ட தேகம் என்பதைப்போல, அணிந்துகொண்டிருப்பது அனைவர் கவனத்தையும் கவரத்தக்க கண்ணாடிதான்—ஆனால் அந்தக் கண்ணாடிக்குள் மறைந்திருக்கும் கண்களோ முழுக் குருடு என்பதைப் போல, கையிலே வீற்றிருப்பது பேனாவில் சிறந்த பார்க்கர் பேனாதான்—ஆனால் அந்தப் பேனாவிலோ, மை, துளியும் இல்லை என்பதைப்போல, உணவுத் தட்டிலே உயர்வகைச் சிற்றுணவுகள் உயர உயரமாகத்தான் அடுக்கிவைக்கப்பட்டிருக்கின்றன—ஆனால், சிற்றுணவு ஒவ்வொன்றிலேயும், விஷம், வேண்டியமட்டும் கலந்துவைக்கப்பட்டிருக்கிறது என்பதைப்போல, பார்வைக்கு அழகான தாழம்பூதான்—ஆனால் அதற்குள்ளே சிறு பாம்பு இருந்துகொண்டு சீறிச்சீறிப் பாய்கிறது என்பது போல, ஜமீன்தாரின் வாழ்க்கை, புறத்தோற்றத்தைக் கொண்டு மட்டும் பார்க்கிறபோது பள

(11-ம் பக்கம் பார்க்க)

# பணம் பாழாகும் படலம்!

"ஓஹோ, கண்ணப்பனு! வா, வா, உன்னைத்தான் பார்க்க வேண்டுமென்றிருந்தேன்! அதற்குள் நீயே வந்து விட்டாய்!... அட, என்னப்பா இது, உன் முகமெல்லாம் ஒரே புன்னகைப் பூந்தோட்டமாய் இருக்கிறது, என்ன சமாசாரம்?"

"நீ கேட்பதைப் பார்த்தால், செய்தியே உனக்குத் தெரியாது என்றல்லவா தோன்றுகிறது! இராமலிங்கம், எனக்கு மாதா மாதம் வருகிற சம்பளம் எவ்வளவு?"

"இது தெரியாதா எனக்கு? ரூபாய் 100."

"ஆனுல் இந்த மாதம் எனக்கு எவ்வளவு வருமானம் கிடைத்திருக்கிறது தெரியுமோ? 200."

"இருநூறு ரூபாயா? இரண்டு நூறுகளா? முழுசா இரண்டு நூறு? எப்படி கண்ணப்பா இவ்வளவு தொகை கிடைத்தது உனக்கு?"

"அப்படிக் கேள் சொல்லுகிறேன்! என் வீட்டிற்குப் பக்கத்து வீட்டிலே ஒரு கிழவர் இருக்கிருரல்லவா பரந்தாம முதலின்னு!"

"ஆமாம்! நம்ம பரந்தாமன்! பரம ஏழை! பார்த்தாலே ரொம்ப பரிதாபமா இருக்கும்! குடும்பமோ ரொம்ப பெரிசு. வருவாயோ ரொம்ப சிறிசு. பணக் கஷ்டம் சொல்லி முடியாது அவனுக்கு! அவனையா சொல்றே!"

"ஆமாம் ஆமாம் அவனைத்தான் சொல்றேன்! சொல்லமுடியாத கஷ்டம்தான் படருன்! அதைப் பார்த்தால் முடியுமா! யார்தான் இந்த உலகத்திலே கஷ்டப்படாமல் இருக்கிருங்க! அந்தக் கிழவனுக்கு எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னே ஒரு பத்து ரூபாய் கடன் கொடுத்திருந்தேன்! அந்தக் கடன் வட்டி மேலே வட்டி ஏறி இப்போ நூறு ரூபாய் ஆய்விட்டது. அதைத்தான் கேட்டு வாங்கிட்டு வந்தேன்."

"அட பாவி! அந்தப் பரம ஏழைகிட்ட பத்து ரூபாய் கடனைக் கொடுத்துவிட்டு நூறு ரூபாய் திரும்பி வாங்க எப்படி கண்ணு உனக்கு மனசு வந்தது? அக்கிரமம்! அக்கிரமம்! அதிருக்கட்டும் கண்ணு, அந்த நூறை என்ன பண்ணே? உன் மூத்த பிள்ளைக்குப் புத்தகம் வாங்கப் பணம் இல்லேன்னு சொல்லிக்கிட்டிருந்தியே அதை வாங்கிட்டியா?"

"இல்லே இராமலிங்கம்"

"உன் சின்ன பெண்ணுக்கு ஏதோ நோய்—டாக்டரிடம் போகணும்—அப்படீன்னு பேசிக்கிட்டிருந்தியே—அதுக்கு ஏதாவது?"

"இல்லே—அதுக்குக்கூட செலவு பண்ணலே!"

"பெரிய பெண்ணுக்குத் துணிமணியாவது வாங்கினியா?"

"இல்லே போ!"

"என்ன கண்ணு விளையாடறே! பிறகு என்னதான் பண்ணே அந்தப் பணத்தை வச்சிக்கிட்டு!"

"நூறு ரூபா கிடைத்ததோ இல்லையோ நேரே போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனேன். நம்ம வீட்டிலே முன் கட்டிலே குடித்தனம் இருக்கிருனல்லவா முனிசாமி—ரொம்ப நாளா என்னைக் கண்டபடி திட்டி வம்பு பண்ணிக்கிட்டிருக்கிருன்—அவனை ஏதாவது ஒரு கேசிலே மாட்டி உள்ளே தள்ளிடறதுக்கு ஏற்பாடு பண்ணேன். அதற்கு ஒரு ஐம்பது செலவாச்சு."

"அட அநியாயமே! மிச்சம் ஐம்பது—"

"ஒரு பத்து சீட்டாட்டத்திலே தொலைந்தது! இன்னொரு பத்து லலிதா பத்மினி நடன டிக்கட்டுக்கு! ஒரு ஐந்து, கச்சேரி கேட்க! சினிமா பார்த்த வகையிலே ஒரு நாலு ரூபா........."

"போதும் போதும்! வாயை மூடு கண்ணப்பா! வெளியே சொன்னு வெட்கக் கேடு!"

* * *

எங்கே நடந்தது இந்த உரையாடல் என்கிறீர்களா? எங்கே நடந்திருந்தால் என்ன? இந்த உரையாடலிலே வரும் கண்ணப்பனைப் போலத்தான், சென்னை ஆட்சியாளர்களும், கண் மூடித்தனமாக நடந்து கொண்டிருக்கிருர்கள்—அண்மையில் அவர்கள் வெளியிட்டுள்ள சென்ற ஆறுமாத கால வரவு செலவுக் கணக்கு, இந்த உண்மையைத்தான் நமக்கு நன்கெடுத்துக் காட்டுகிறது—எனவேதான் மேற்கண்ட உரையாடல் இங்கே தரப்பட்டிருக்கிறது.

உரையாடலிலே வரும் கண்ணப்பனுக்கு வருவாய் வந்த விதத்தையும் அந்த வருவாய் செலவான வழிகளையும் கேட்டால் எப்படி நம் உள்ளம் பதைக்குமோ, அப்படித்தான், சென்னை ஆட்சியாளர்கட்கு வருமானம் வந்த கதையையும், அந்த வருமானம் பல வழிகளிலும் வீண் செலவான விசித்திரத்தையும் பத்திரிகையில் பார்த்தால், நம் நெஞ்சு குமுறும்.

இந்த ஆண்டில், ஜனவரி முதல் ஜூன் வரை உள்ள முதல் ஆறு மாத காலத்தில், சென்னை ஆட்சியாளர்கட்குக் கிடைத்த வருமானம், சென்ற ஆண்டில் முதல் ஆறு மாத காலத்தில் கிடைத்த வருமானத்தைவிட ரு 93, 37,000 அதிகம்.

ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய், எதிர் பார்த்ததைவிடக் கூடுதலாகக் கிடைத்திருக்கிறது சென்னை ஆட்சியாளர்கட்கு. இதை நினைத்து நினைத்து உள்ளம் பூரித்துப் போகிருர் நிதி அமைச்சர் கனம் கோபாலர். பூரிப்படையட்டும் அவர்—அதை வேண்டாமென்று கூறவில்லை நாம்—ஆனுல் இந்த அதிக வருவாய் ஒரு கோடி எப்படி வந்தது சர்க்காருக்கு—அதைத்தான் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள் என வேண்டுகிறோம் — கனம் கோபாலரை அல்ல—உங்களை—பொதுமக்களை.

அதிகமாகக் கிடைத்த இந்த ஒரு கோடியிலே, ஏறத்தாழ நாலில் ஒரு பங்கு தொகை, விற்பனை வரி விதி

குடியேற்றம் (வ. ஆ.)
ஆற்றங்கரையில்
தி. மு. க.
பொதுக் கூட்டம்
20—11—50 திங்கள் மாலை
5-30 மணி
இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.
சொற்பொழி வாற்றுவார்.

தத்தை உயர்த்தியதால்தான் கிடைத்திருக்கிறது — கண்ணியமான முறையிலே கனம் கோபாலரே ஒப்புக்கொண்டிருக்கிறார் இந்த உண்மையை.

விற்பனை வரி, ஏழைகளை வதைக்கும் வரி! எவருக்கும் தெரிந்த உண்மை இது!

அரிசி வாங்கினாலும் கோதுமை வாங்கினாலும், எண்ணெயை வாங்கினாலும் எள்ளையே வாங்கினாலும், வாழ்க்கைத் தேவைகளில் எதனை வாங்கினாலும், ஏழை, விற்பனை வரியைத் தந்தேயாக வேண்டும் ஆட்சியாளர்கட்கு.

மாதம் எல்லாம் உழைத்து முப்பது வெண் பொற் காசுகள் தேடுகிறான் ஓர் ஏழை என்று வைத்துக் கொண்டால், அந்த முப்பது ரூபாயிலே ஏறத்தாழ அரை ரூபாய், விற்பனைவரி மூலமாக அவனிடமிருந்து பறிக்கப்பட்டே விடுகிறது ஆட்சியாளர்களால்.

விற்பனை வரியைப் போல உழைப்பவர் உல்லைத் தாக்கும் வரி வேறு எதுவும் கிடையாது— அவ்வளவு கொடுமையான வரி! ஏழையின் வாழ்வை வாட்டி வதைக்கும் வரி.

ஏழை எந்தப் பொருளை வாங்கினாலும் அந்தப் பொருளுக்கு விற்பனை வரி உண்டு. ஏழை என்ன, ரோல்ஸ் ராய்ஸ் காரையும் புது மோஸ்தர் ரேடியோ செட்டையுமா வாங்கப் போகிறான்? உயிரை உடலோடு ஒட்டவைத்திருப்பதற்கு என்னென்ன பொருள்கள் தேவையோ அவற்றைத்தான் வாங்குவான்—வாழ்க்கையின் அதி அவசியப் பண்டங்களைத்தான் அவனால் வாங்கமுடியும் — வாழ்க்கையின் அதி அவசியத் தேவைகள் அத்தனையையும் வாங்கக்கூட அவனிடம் போதுமான அளவு பணம் கிடையாது—எனவே, அவசியத் தேவைகளிலேயே சிலவற்றைத்தான் பூர்த்தி செய்துகொள்ள முடியும் அவனால்—பல தேவைகளை அவன் மறந்து விட்டுத்தான் வாழ்ந்தாக வேண்டும்.

உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இல்லம்—இந்த மூன்று தேவைகளையும்தான் வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகள் என்று கூறுவர். இந்த மூன்று தேவைகளையும் நிறைவு செய்வது என்பது நிச்சயமாக முடியாது ஏழையால்.

மூன்று வேளை உணவு கிடைக்காது அவனுக்கு—அந்த அளவு பணம் இராது அவனிடம்—ஒரு வேளைதான் உண்பான்—இரு வேளை பட்டினிதான் இருப்பான்.

அரையிலே உடுத்த ஒரு முழு வேட்டி—மேலே மார்பை மறைக்க ஒரு சட்டை—இந்த இரண்டையும் பெறமுடியாது ஏழையால்—ஏது அவனிடம் அவ்வளவு பணம்—கிழிந்துபோன ஏதோ ஒரு பழங் கந்தல்—கோவணத் துண்டைவிடக் கொஞ்சம் பெரிதாக இருக்கும்—அதைத்தான் இடுப்பிலே சுற்றிக் கொண்டிருப்பான் — அவ்வளவுதான் அவனால் முடியும்.

இருக்க இல்லம்! அது ஏது அவனுக்கு? சாக்கடை ஓரம், தெருக்கோடி, குப்பைமேடு, வீதி ஓரம்—இவைதான் அவன் இல்லங்கள்!

இத்தகு நிலையிலே இருக்கிறான் ஏழை! என்றாலும் அவனை மறக்கவில்லை ஆளவந்தார்கள்! கொடு கொடு விற்பனை வரியைக் கொஞ்சமும் குறைக்காமல் கொடு என்று அவனைப் பியத்துப் பிடுங்கி விடுகிறார்கள் பாரதபுத்திரர்கள்.

மதுரை மாவட்டம்

**மேலூர்**

**தி. மு. க. கூட்டம்.**

23—11—50 வியாழன்

மாலை 5-30 மணி

பேச்சாளர் :

**காஞ்சி கல்யாணசுந்தரம்**

பசி பசி எனப் பதறி அழுகிறான் ஏழை—வயிறார உண்ண உணவில்லை — உணவை வாங்கக் காசில்லை—இருக்கும் காசுகளோ மிகச் சில—அவற்றிலேயே சில காசுகளை காருண்ய மிக்க காங்கிரஸ் சர்க்கார் விற்பனைவரி என்ற பெயரால் தட்டிப் பறித்துவிடுகிறார்கள்.

கொடுமை! கொடுமை! நெஞ்சை நடுங்கவைக்கும் கொடுமை இது! மனித உள்ளம் படைத்த எவரும் மனம் கசிந்து கூறுவர் இப்படி! ஆனால் கூறுகிறாரில்லை கனம் கோபாலர் இதுபோல! கொண்டுவா—கொண்டுவா—கொஞ்சமும் குறையாமல் விற்பனை வரியைக் கொண்டுவா என்றுதான் ஓயாமல் கூறுகிறார்!

இப்படியெல்லாம் ஏழைகளை வதைத்தும் வாட்டியும் உருட்டியும் மிரட்டியும் ஒரு கோடி ரூபாய் அதிக வருமானம் காட்டியிருக்கிறார்களே ஊராளும் உத்தமர்கள், அவர்கள், அந்த வருமானத்தை, ஏழையின் வாழ்வை வளமாக்க, பாட்டாளியின் துயரத்தைத் தீர்க்க, நாடெங்கும் கல்விச்சாலைகளை நிறுவ, வட்டாரந் தோறும் முதல்தரமான மருத்துவ நிலையங்கள் உருவாக்க என்று உள்ள இப்படிப்பட்ட நற்பணிகளுக்காகவாவது செலவிட்டிருக்கிறார்களா? அதுவுமில்லை! கதையிலே வரும் கண்ணப்பனைப் போலத்தான் கவைக்குதவாக் காரியங்கட்குக் காசை வாரி இறைத்திருக்கிறார்கள். பணம் பாழாகும் படலம் என்ற நாடகத்தை வேக வேகமாக நடத்திக் காட்டியிருக்கிறார்கள்.

ஜனவரி முதல் ஜூன் வரையுள்ள ஆறு மாத காலத்திற்கு, சென்ற ஆண்டைவிட அதிகப்படியாகக் கிடைத்த வருமானம்—முன்னரே நாம் குறிப்பிட்டிருக்கிறோம்—ரூ 93 லட்சம்.

ஆனால் அதே ஆறு மாத காலத்தில், சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு அதிகப்படியாக ஆகியிருக்கும் செலவு ரூ. ஒரு கோடியே முப்பத்திரண்டு லட்சம்!

அதிக வரவு—93 லட்சம்.

அதிக செலவு—132 லட்சம்.

ஆம்! வரவைவிட செலவு அதிகம்! அதிக வரவு, 93 லட்சம்! அதிக செலவு 132 லட்சம்! ஆக, வரவைவிட செலவு 39 லட்சம் கூடுதலாக இருக்கிறது!

எதிர்பார்த்ததைவிட 93 லட்சம் ரூபாய் அதிகமாகக் கிடைத்திருக்கிறது ஆட்சியாளர்கட்கு! அப்படிக் கிடைத்தும் அதுவும் போதவில்லை அவர்களுக்கு. அதைவிட அதிகமாக 39 லட்சம் செலவாகி, இறுதியில் நஷ்டக் கணக்கைத்தான் போட்டுக் காட்ட முடிகிறது அந்தப் பாரத புத்திரர்களால்!

என்னதான் செலவு செய்திருக்கிறார்கள் அப்படி? செலவுக்

கணக்கைக் கொஞ்சம் அலசி ஆராய்ந்துதான் பார்ப்போமே!

அதிகச் செலவு ரூ. 132 லட்சத்தில், ஏறத்தாழ 33 லட்சம் ரூபாய், அதிக உணவு உற்பத்தி இயக்கத்திற்காகச் செலவழிக்கப்பட்டிருக்கிறதாம் — சர்க்கார் வெளியிட்டுள்ள செய்தி இது.

இந்த முப்பத்துமூன்று லட்சம் தொகையும் பாழுக்கு இறைக்கப்பட்ட பணம் என்று நாம் சொன்னால் நாடாளும் நாயகர்கள் கடுங்கோபம் கொள்ளக்கூடும்-எனவே நாம் அப்படிச் சொல்லவில்லை— ஆனால் ஆட்சியாளர்களின் இந்த வீண் செலவுக்கு வேறு என்ன தான் பொருத்தமான பெயரிடுவது —அதுதான் நமக்குப் புரியவில்லை —ஆட்சியாளர்களே விடை கூறட்டும்.

சென்ற ஐந்தாண்டுக் காலத்தில் அதிக உணவு உற்பத்தி இயக்கம் என்ற பெயரால் இந்தத் தேசபக்த ஆட்சியினரால் அள்ளி இறைக்கப்பட்ட பணம் எண்ணற்ற லட்சங்களாகும். ஆனால் அவ்வளவு பெருந்தொகை செலவழிக்கப்பட்டதனால் நாடு பெற்ற பலன், 12 அவுன்சாக இருந்த அரிசிப் பங்கீடு 10 அவுன்சாகக் குறைந்து, 10 பிறகு 8 ஆகி, எட்டு ஏழாகி, ஏழு, ஆறாக மாறியிருக்கிறதே, இந்தப் பூணாரம் பூண்ட புதுமைதானே தவிர வேறில்லை. அதிக உணவு உற்பத்தி இயக்கத்திற்கு அதிகப் பணம் செலவாக ஆக, அரிசிப் பங்கீடு மேலும் மேலும் குறுகிக் கொண்டேதான் வந்திருக்கிறதே தவிர, குண்டுமணி அளவும் கூடுதலானபாடில்லை.

இதுவரை செலவழிந்திருக்கும் செல்வத்தின் கதி இது என்று சொன்னால், இந்த ஆண்டு வாரி இறைக்கப்பட்டிருக்கும் இந்த முப்பத்துமூன்று லட்சத்தால் மட்டும், அரிசிப்பங்கீடு, ஆறு அவுன்சிலிருந்து பன்னிரண்டு அவுன்சாக உயர்ந்துவிடும் என்று, யார்தான், எந்தக் காரணத்தைக் கொண்டுதான், எப்படிக் கூறமுடியும்? ஆகவேதான் நாம் அழுத்தந்திருத்தமாக அறிவித்துக்கொள்ள ஆவலுறுகிறோம், ஆளவந்தார்கள் அதிக உணவு உற்பத்திக்காக ஆனந்தத்துடன் அள்ளித் தெளித்திருக்கும் இந்த 33 லட்சமும் வீண் வீண் என்று!

இலட்சம் முப்பத்துமூன்றை இச்செயலுக்குப் பயன்படுத்திவிட்ட இராமராஜ்ய சர்க்கார், வேறோர் பத்துலட்சத்தை, போலீஸ் படைகளை ஒன்றுக்குப் பத்தாகப் பெருக்கி ஊரெங்கும் நிலைநாட்டும் உன்னத காரியத்திற்கென்று ஒதுக்கிவைத்துவிட்டார்கள்.

இந்தப் பாரதபுத்திரர்களின் புனிதமான ஆட்சியில், போலீஸ் படை பெருகுகிறது என்று சொன்னால், அந்தப் பெருக்கம், கொலைகாரர்களைக் கண்டுபிடித்துத் தண்டிப்பதற்கோ, கொள்ளையடிப்போரைக் கூண்டுக்குள் அடைப்பதற்கோ, சுவர் ஏறிக்குதிப்பவர்களைச் சிறைச்சாலைக்குள் தள்ளுவதற்கோ, கன்னம் வைக்கும் கண்ணியர்களின் கொடுமைகளைக் குறைப்பதற்கோ அல்ல என்பதையும், காங்கிரசிற்கு மாறான மற்றைய கட்சிகளை மட்டந்தட்டும் மகத்தான பணிபுரிவதற்கேதான் என்பதையும், நாம் கூறித் தெரிந்துகொள்ளும் நிலையில் நாடு இல்லை. நம்மைவிட, நாடு, இந்த உண்மைகளை மிக நன்றாகவே தெரிந்துவைத்திருக்கிறது. தெரியாமல் இருந்த ஓரிருவருக்கும் கூட, குன்றத்தூர் கொடுமை, தெள்ளத் தெளியத் தெரிவித்திருக்கிறது இந்த உண்மைகளை.

மக்கள் மன்றத்தின் எழுச்சிக் குரலை ஒடுக்குவது. பசி பசி என்று பதறிடுவோரின் பட்டினிக் குரலை அடக்குவது. எழுத்துரிமையும் பேச்சுரிமையும் மக்கள்தம் பிறப்புரிமைகள் என்ற வீரமுழக்கத்தை எழுப்பிவரும் விடுதலை விரும்பிகளை வாட்டுவது. ஆளவந்தார்களின் அநீதிச் செயல்களை அஞ்சாமல் எடுத்துரைக்கும் அறப்போர் இளைஞர்களை அணிஅணியாக வெஞ்சிறைக்குள் தள்ளி வதையவைப்பது. அமைதி வழி நின்று கருங்கொடி காட்ட வரும் கண்ணியர்களையும் குண்டாந்தடிகொண்டு குத்திக்குடைவது. கூட்டம்கூடும் உரிமை வேண்டிநிற்கும் தோழர்களைத் துப்பாக்கிகொண்டு தாக்கித் துயரக் கடலில் தள்ளுவது. இத்தகு செயல்களை ஈவு இரக்கமின்றி நடத்திக், காட்டுவதற்குத்தான் போலீஸ் படைகள் இன்றைய ஆட்சியாளர்களால் பயன்படுத்தப்படுகின்றனவே தவிர, அவை, நியாயமாக எந்தச் செயல்புரியப் பயன்படுத்தப்பட வேண்டுமோ அத்தச் செயல் புரிய அல்ல.

போலீஸ் படைகளைப் பெருக்குவதற்காக என்று ஒதுக்கப்பட்டுள்ள இந்தப் பத்து லட்சம் ரூபாயையும், இப்போது உள்ள போலீஸ்காரர்களின் மிகக் குறைந்த ஊதியத்தைச் சற்று, உயர்த்துவதற்காக இந்த ஆட்சியாளர்கள் பயன்படுத்தியிருந்தாலாவது நாம் பெருமகிழ்ச்சியடைந்திருப்போம். ஆனால் அப்படியும் செய்யாமல், இப்போதுள்ள குறைந்த ஊதியத்திலேயே மேலும் பல்லாயிரவரைப் போலீஸ் படையில் இணைத்துக் கொள்ளும் செயலை பணம் பாழாகும் படலம் என்ற தலைப்பின் கீழன்றி வேறெந்தத் தலைப்பின் கீழ்க் குறித்தல் இயலும்?

மொத்தச் செலவு ரூ 132 லட்சத்தில், கல்விக்கென்று ஒதுக்கப்பட்ட ரூ 18 லட்சம், ஆஸ்பத்திரிகட்கென்று ஒதுக்கப்பட்ட ரூ 6 லட்சம், நீர்ப்பாசனச் செலவு ரூ 18 லட்சம், ஆக மொத்தம் ரூபா 42 லட்சம் போக மிச்சமுள்ள 90 லட்சம் ரூபாயும் இதுவரை நாம் எடுத்துக் காட்டியுள்ள வீண் செலவுகட்கும் இவையனைய வேறு பல வேண்டாச் செலவுகட்குமே ஒதுக்கப்பட்டிருக்கின்றன, மொத்தச் செலவு ரூ 132 லட்சத்தில், ஆஸ்பத்திரிகட்கென்று ஒதுக்கப்பட்டுள்ள தொகை— மறந்து விடாதீர்கள்—ஆறே ஆறு லட்சம்தான். மக்களின் நல்வாழ்வை வளர்ப்பதிலே மதிமந்திரிகட்குள்ள மன ஈடுபாடு எவ்வளவு மகத்தானதாக இருக்கிறது பாருங்கள்!!

ஆட்சியாளர்கள் தமக்குத் தேவையான வருவாயை ஈட்டும் முறையோ ஏழைகளை வதைக்கும் படலமாக இருக்கிறது.

அப்படி ஈட்டப்பட்ட அரும் பொருளை அவர்கள் அடுக்கடுக்காக எடுத்துச் செலவழிக்கும் தன்மையோ, பணம் பாழாகும் படலமாக இருக்கிறது.

ஏழைகளை வதைக்கும் படலம்— முதலில்!

பணம் பாழாகும் படலம்-பிறகு!

வருவாய்—இப்படி!

செலவு—அப்படி!

சர்க்கார் இருந்தால் இப்படி, நாடு வளமடைவது எப்படி?

தேசியத் தோழர்களே, அருள் கூர்ந்து விடை கூறுங்கள்.

---

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மும், சாகும் வரையில் கொண்டிருப்பவளாகவே விலாசவதியைப் பார்த்துக் கொள்ளவேண்டும் என்பது ஏகாம்பர அய்யரின் உறுதியான எண்ணம். வருணாஸ்ரமம் வீழ்ச்சியுற்றால் என்ன, ஆலய வழிபாடு அழிந்தால் என்ன, ஆச்சாரம் கெட்டுத் தொலைந்தால் என்ன, முன்னோர்கள் ஏற்படுத்திய சமுதாய ஏற்பாடு சீரழிந்து போனால்தான் என்ன, தான் உண்டு, தனது குடும்பம் உண்டு, அதற்கு எப்படியாவது, ஏதாவது நல்வாழ்வு தேடிக்கொள்வதோடு இருந்து விடுவோம் என்ற மட்டரசமான சுயநலத்தை கணக்குப்பிள்ளை ஏகாம்பர அய்யர் கனவில் கூட கருதுபவர் அல்ல.

ஏகாம்பர அய்யரின் தினசரி வாழ்க்கையில் சனாதன ஆசார அனுஷ்டானம் ஒரு கணம்கூட இடம் பெற்றது கிடையாது. பெரும்பாலும் பாழ் நெற்றியொடு தான் தினம் தினம் காட்சி அளிப்பார். வைதீக திட்டத்தில் சிறந்த இடம்பெற்றுள்ள உச்சிக் குடுமியை ஏகாம்பர அய்யர் என்றுமே தீண்டினது கிடையாது. பொடியாகத் தான் தனது தலை முடியை வெட்டி விட்டுக் கொண்டிருக்தார். மிராசுதார் தீண்டப்படாதவர்கள் என்று சொல்லப்படும் உழவர்களிடம் எரிபுரி என்று நடந்துகொண்ட போதிலும், ஏகாம்பர அய்யர் அவர்களிடம் அன்பு காட்டியே, நடந்துகொள்வது வழக்கம். சில சந்தர்ப்பங்களில் மிராசுதார் மாளிகையில் சிற்றுண்டி உண்ணக்கூட முன்வந்திருக்கிறார். மிராசுதார் முதலியார் தான் அதற்கு இடம் கொடுக்கக் கண்டிப்பாகமறுத்து விட்டார்.

ஏகாம்பர அய்யரின் குக்கிராமத்தில், இருந்த பிராம்மணோத் தமர்கள், ஏகாம்பர அய்யரை, அவர் நடத்தையைக் கொண்டு, வெளிப்படையாக வெறுத்தும் தூற்றியும் வந்திருக்கிறார்கள். அவர்களுடைய சுபா அசுப காரியங்களுக்கு ஏகாம்பர அய்யரை மரியாதைக்குக் கூட அழைப்பது கிடையாது. அய்யரின் குடும்பத்தை போஜனத்துக்கு வற்புறுத்தி அழைக்கும் அவர்கள், ஏகாம்பர அய்யரை உபசாரத்துக்குக்கூடசாப்பிட அழைப்பது கிடையாது. ஏகாம்பர அய்யரின் போக்கில், அந்த அளவிற்கு ஆத்திரம்கொண்டிருந்தார்கள் அக் கிராமத்து வேத சிரோன்மணிகள்.

அவர்களுக்குச் சக்தி இருந்தால் கண்டிப்பாக அய்யரை, அக் கிராமத்தை விட்டு என்றைக்கோ வெளியேறச் செய்திருப்பார்கள். ஆனால் மிராசுதாரின் செல்வாக்கு, அவர்களுக்கு இடைஞ்சலாக இருந்தது.

தன்வரையில் சீர்திருத்தக்காரராக எல்லா வகையிலும் நடந்துகொண்ட ஏகாம்பர அய்யர், உபநிஷத்துக்களின் உயர்வைப் பற்றி உரைப்பதிலோ, வேதக் கருத்துக்களுக்கு வியாக்யானம் புரிவதிலோ, ஸ்மிருதிகளின் மேன்மையை வலியுறுத்துவதிலோ, சமஸ்கிருதத்தின் சிறப்பைப் போற்றுவதிலோ, சனாதனதர்மத்தின் அத்தியாவசியத்தை உணர்த்துவதிலோ, தேர்திருவிழாக்களின் பெருமையைக் குறித்துப் புகழ்ந்து பேசுவதிலோ, 'லோக குரு' சங்கராச்சாரியாருக்கும் இளைத்தவர் அல்ல கணக்குப் பிள்ளை ஏகாம்பர அய்யர்.

தீவிரமான சீர்திருத்தக்காரராக இருக்கிற ஒருவர், தான் செல்லும் பாதைவழியே பலப்பலர் தொடர்ந்து வருவதைத் தான் விரும்புவார். ஒருசீர்திருத்தக்காரனுக்கு எழுதவும் பேசவும் ஆற்றல் இருக்குமானால், அவன், தன் எழுத்தையும் பேச்சையும், மற்றவர்களைத் தன் வழிப்படுத்தும் முயற்சிக்குத் தான் பயன்படுத்துவான். தன்வரையில் வெறும் நெற்றியாக இருக்கிற ஒருவன், மற்றவர்களைப் பார்த்து திருமண் தீட்டுங்கள், திருநீறு பூசுங்கள் என்று பேச முன்வர மாட்டான். திருமண்ணின் பிரபாவத்தையும், திருநீற்றின் மான்யத்தையும் சதா சர்வ காலமும் சொல்லிக்கொண்டும் இருக்கமாட்டான். ஏகாம்பர அய்யர் இப்படி நடந்துகொள்ளுகிறார். ஒரே காலத்தில் தன் வரையில் தோற்றத்தில் சீர்திருத்தக்காரராகவும், உள்ளத்தில் ஒப்பற்றபழைமையின்பாதுகாவலராகவும் இருக்கிறார். என்ன பொருள் இதற்கு? ஏன் இந்த முரண்பாடு? ஏகாம்பர அய்யருக்கு என்ன சித்த பிரம்மையா? தெரிந்து செய்கிறாரா? தெரியாமல் செய்கிறாரா? அவருடைய சீர்திருத்தக்கோலம் பின்பற்றத்தக்கதா பிறரால்? அல்லது அவருடைய சனாதனக் காலட்சேபம் பின்பற்றத்தக்கதா மற்றவர்களால்?

(தொடரும்)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பளப்பாகத்தான் இருக்கிறது—பட்டொளி வீசித்தான் திகழ்கிறது—அலங்காரத்தின் ஆநந்த நடனமாகத்தான் இருக்கிறது-உல்லாசபுரியின் உன்னதப் பகுதியாகத்தான் இருக்கிறது. ஆனல், புறத்தோற்றத்தைத் தாண்டி, கொஞ்சம் உள்ளே நுழைந்து, உள்ளுக்கு உள்ளே உள்ளது யாது என்பதைக் கண்டாலோ, “சீ-இதுவும் ஒரு வாழ்வா?” என்றுதான் சிந்தை நொந்து பேசச் செய்யும் எவரையும்!

தோற்றத்தில் புலிபோல—ஆனல் உண்மையில் பூனையாக, தோற்றத்தில் பயில்வான்போல ஆனல் உண்மையில காசநோயாளனுக இருக்கும் இந்த ஜமீன்தாரரைப்போன்ற பரிதாபகரமான நிலையில்தான் இருக்கிறது இன்றையதினம் அகில இந்திய காங்கிரஸ்!

ஜமீன்தாரருக்கு எப்படி செல்வமும் செல்வாக்கும் ஆளும் அம்பும் ஏராளமாக இருக்கிறதோ அப்படித்தான், காங்கிரஸ் கட்சிக்கும் அதிகார பலமும் அரசாங்கபலமும் அமோகமாக இருக்கிறது. என்றுலும் ஜெமீன்தாரின் வாழ்வு எப்படி செல்லரித்துப்போன சுவடியாக இருக்கிறதோ, அப்படித்தான், காங்கிரஸ் கட்சியின் வாழ்வும், உளுத்துப்போன உதவாக்கரைக் கட்டிடமாயிருக்கிறது.

ஜமீன்தாரரின் புறவாழ்வைப் போலத்தான் காங்கிரஸ் காட்சியின் வெளித்தோற்றம், அன்றலர்ந்த செந்தாமரையாக அழகுக் காட்சி வழங்கிக்கொண்டிருக்கிறது ஆனல் அதே சமயத்தில், ஜமீன்தாரரின் அகவாழ்வு எப்படி, கவிழ்ந்துகொண்டிருக்கும் கப்பலாக இருக்கிறதோ, அப்படித்தான் காங்கிரஸ் கட்சியின் உண்மை நிலையும், ‘இப்பவோ பின்னேயோ இன்னும் சற்று நேரத்திலோ’ என்னும் மரண கீதத்தைப் பாடிக்கொண்டிருக்கிறது.

தன்னுடைய ஆநந்த வாழ்வின் அஸ்தமனம் நெருங்குகிறது என்பது தெரியத் தெரிய, எங்ஙனம், ஜமீன்தாரரின் சொற்களிலே கோபமும் கொதிப்பும் குமுறியெழுகின்றனவோ, அங்ஙனமேதான், தன்னுடைய முடிவுக்காலம் மிக விரைவில்தான் என்பதை உணர உணர, காங்கிரஸ் கட்சியும், தன் எதிர்க்கட்சிகள்மீது, ஆவேசத்தையும் ஆத்திரத்தையும் மழைபோல் பொழியத் தொடங்கியிருக்கிறது.

பார்வையிலே கம்பீரமும், சொற்களிலே தைரியமும் தவழ்கின்றன என்றுலும். ஜமீன்தார் உள்ளத்திலே, எவ்வண்ணம் வேதனையும் விம்மலும் அழுகையும் அவலமுமே குடிகொண்டுள்ளனவோ, அப்படித்தான், காங்கிரஸ் கண்ணியவான்களின் வார்த்தைகளிலே வீம்பும், எழுத்துகளிலே எக்காளமும் நடமாடுகின்றன என்றுலும், அவர்கள்தம் மனம் எனும் மாளிகையில், அச்சம்—கவலை—துக்கம்-வேதனை ஆகிய நல்ல பாம்புகள் நர்த்தன மாடியபடி உள்ளன.

ஜமீன்தாரின் சொற்களிலே தெறிக்கும் கோபமும் கொந்தளிப்பும் எப்படி அவருடைய உள்ளத்தை அரிக்கும் வேதனையையும வருத்தத்தையும் மறைக்க எழுந்த முகமூடிகளாக இருக்கின்றனவோ, அப்படித்தான், காங்கிரஸ் கனம்களின் பேச்சிலே இந்நாளில் ததும்பும் கடுகடுப்பும் அதி ஆத்திரமும், அவர்களின் அரசியல் எதிர்காலம் இருண்டு விட்டதே என்பது குறித்து அவர்களுக்கு ஏற்பட்டுள்ள ஆயாசத்தையும் அழுகையையும் மறைக்கும் திரைச்சீலைகளாக இருக்கின்றன.

அணைய இருக்கும் விளக்கு இறுதியில் சற்றுப் பிரகாசமாக எரிந்துவிட்டுத்தான் அணைவது வழக்கம்.

அது போலத்தான், அழிய இருக்கும் ஜமீன்தார், சற்று அதிகப்படியாக ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டுப் பாடிப் பார்க்கிறார்.

அதுவே போலத்தான், மரண புரிநோக்கி மிகமிக வேகமாகப் பயணம் செய்து கொண்டிருக்கும் காங்கிரஸ், இந்த இறுதிக் காலத்தில், முன்னைவிட சற்று கூடுதலான குரலெடுத்துக் குவலயம் அதிரக் கூவிப் பார்க்கிறது.

அணைய இருக்கும் விளக்கு சற்று தீவிரமாக எரியத்தொடங்குவது எப்படி. அது அணைய இருக்கிறது என்பதைக் காட்டும் அறிகுறியாகப் பயன்படுகிறதோ அப்படித்தான், காங்கிரஸ் கட்சியின் தலைவர்களும் தொண்டர்களும் அமைச்சர்களும் அதி மேதாவிகளும் சென்ற இரண்டு மூன்று மாதங்களாக ஆத்திரமொழிகளைவீசத் தொடங்கியிருப்பது, அவர்களுடைய அரசியல் வாழ்வு முடியும் கட்டம் நெருங்கிவிட்டது என்னும் உண்மையை எழிலுற விளக்கும் பண்பு படைத்ததே ஆகும்.

ஆத்திரம் அறிவை மறைக்கும் என்பது ஆன்றோர் அளித்த அரிய மொழி.

இந்த முதுமொழி, காங்கிரஸ் தலைவர்கள், தம் சொற்பொழிவுகளிலே காட்டும் ஆத்திரத்தைப் பொறுத்தவரை, நூற்றுக்கு நூறும் உண்மையாகவே இருக்கிறது.

அவர்களுடைய ஆத்திர அர்தாதிகளிலே முன்னுக்குப் பின்

முரண்—ஏராளம்! ஆராய்ச்சிக்கு நில்லா வாதங்கள்—அளவற்றவை! அர்த்தமற்ற உரைகள்—எத்தனையோ நூறு!

எப்பொருளை, யார் யார் வாய்க் கேட்பினும், அப்பொருளை, நடுநிலை நின்று, அலசி ஆராய்ந்து பார்த்து, அதன் மெய்ப் பொருளை உணர வேண்டும் என்னும் திருக்குறள் மொழி, அவர்கள் அறியாத ஒரு வழி!

"ஏசு! ஏசு! எதிர்க்கட்சியினரை எவ்வளவு வேண்டுமானாலும் ஏசு! மனம் கொண்ட மட்டும் ஏசு! ஏராளமாக, தாராளமாக, ஏசு! யார் இருக்கிறார்கள் நம்மைத் தட்டிக் கேட்க—ஆகவே தூற்றல் அந்தாதியைத் துருவித் துருவிப் பார்த்து ஏசு!"—இது தான் காங்கிரஸ் பிரமுகர்களின் இந்த நாள் பகவத்கீதையாக இருக்கிறது.

**ஆத்திரமாகப் பேசுவது!**
**ஏசல் மொழிகளை வீசுவது!**
**சட்டத்தைக் காட்டி மிரட்டுவது!**
**வீணர் வெறியர் என்று தாக்குவது!**

இந்த 'நாலடியார்'தான் காங்கிரஸ் தலைவர்களின் இருதய கீதமாக இருக்கிறது இந்நாளில்!

பேசுவது, செந்தமிழ் கற்றறிந்த சிவஞானமானாலும் சரி, ஆங்கிலக் கலைபயின்ற அன்பர் செங்கல்வராயனானாலும் சரி, பேசும்போது, இந்த 'நாலடியா'ரை மறப்பது என்பதே கிடையாது.

தலைவர் நிலையில் இருக்கும் காமராஜரும் இந்த நாலடியாரைத்தான் தன் அருமைத் தோழனாகக் கொள்கிறார். தொண்டர் நிலையில் இருக்கும் உபயதுல்லாவும் இந்த நான்மறையைத் தான் சொற்பொழிவுச் சோலையாகக் கொள்கிறார்.

தென்னாட்டுக் காங்கிரஸ் தலைவர்கள், யாருமே, இந்த நாலடியாரை, நாடாதவர்கள் என்று சொல்லத்தக்க நிலையில் இருக்கக் காணோம்.

அமைச்சர்கள், நாடாளும் நல்ல நிலையில் இருப்பவர்கள்; பொறுப்பான பதவி வகிப்பவர்கள்; எல்லாக் கட்சியினரையும் ஒருங்கே ஆளும் தகுதி பெற்றவர்கள். எனவே, பிற காங்கிரஸ் தலைவர்கள் எப்படிப்போனாலும், அவர்களைப் பொறுத்தவரை இத் தூற்றல்பாதையைக்கண்ணெடுத்தும் பார்க்கமாட்டார்கள், கண்ணியத்தையும் பெருந்தன்மையையுமே கண்ணிமைகளெனப் போற்றி வளர்ப்பார்கள் என்று இதுவரை நாம் எண்ணியிருந்தோம். ஆனால், "தவறு தவறு—அந்த எண்ணம் முழுத் தவறு-அமைச்சர்களாகிய நாங்களும் பிற காங்கிரஸ் தலைவர்களின் ஏசல் மார்க்கத்தின் வழியேதான் ஏகுவோம்" என்று, இந்த வாரம், சென்னை காங்கிரஸ் அமைச்சர் தோழர் பக்தவச்சலம் தம் செயல்மூலம், சொல்லிக்காட்டிவிட்டார்.

**முட்டாள்தனமான இயக்கம்**
**அற்பத்தனமான முயற்சி**
**பைத்தியக்காரத்தனமான செயல்**
**நாகரிகம் தெரியாத மக்கள்**


புதிய புத்தகம்! வெளிவந்துவிட்டது!!

"போர்வாள்" ஆசிரியர்

**மா. இளஞ்செழியன் B. A. Hons.**

இயற்றிய

## சரிந்த சாம்ராஜ்யம்!

அருமையான கருத்துக்களை இனிமையான தமிழில்தரும் சரிதம் தழுவிய சிந்தனை ஓவியம். ★ மராட்டிய மண்டலம் ஆரிய மாயையால் ஆட்டிப் படைக்கப்பட்ட அக்கிரமத்தை விளக்கிக் கூறும் அழகிய நூல்.

சிறந்த வாளாயுதம் வெறும் புல்லாயுதத்திற்குப் பணிந்துவிட்டது—அது எப்படி?

மாவீரன் சிவாஜியை ஒரு மதகுரு, தன் மனம்போன வண்ணம் நடக்கவைத்தான்—அது எவ்வாறு?

வீரம் தாழ்ந்தது: வஞ்சகம் வென்றது—அது ஏன்?

இந்தக் கேள்விகட்கு ஒரு பதில், "சரிந்த சாம்ராஜ்யம்"!

விலை அணா 0 10 0 தபாலில் 0 12 0

வணிகர்க்குத் தக்க கழிவுண்டு.

**பகுத்தறிவுப் பாசறை**

பவழக்காரத் தெரு : : சென்னை 1.

இவ்வளவு கடுமையான முறையில், கேட்கும்போதே நம் நெஞ்சு கொதிப்படையும் வகையில், திராவிட இயக்கத் தோழர்களாகிய நம்மையும் நம் இயக்கத்தையும் தூற்றல் மொழிகளாலே போற்றியிருக்கிறார் அமைச்சர் பக்தவச்சலம், இந்த வாரம்!

என்ன குற்றம் செய்துவிட்டோம் நாம் இப்படியெல்லாம் அவரால் தூற்றப்பட?

என்ன மாபாவம் புரிந்துவிட்டோம்?

செய்யத்தகாத செயல் எதனைச் செய்துவிட்டோம்? கூறத்தகாத வார்த்தை எதனைக் கூறிவிட்டோம்?

கொலை செய்தோமா? கொள்ளையடித்தோமா? திருட்டுத் தொழில் புரிந்தோமா? சுவர் ஏறிக்குதித்தோமா? கன்னம் வைத்தோமா — என்ன செய்தோம் நாம்?

எதற்காக நம்மை, நம் இயக்கத்தை, இயக்க வீரர்களை, 'பைத்தியக்காரர்கள்' என்ற பெயரால் அழைக்கிறார் இந்தப் பேரறிவாளர் பக்தவச்சலனார்?

இதோ, அமைச்சர் பக்தவச்சலனார், 'அழகு விடை' தருகிறார், கேளுங்கள்:—

"தென்னாட்டை, வடநாட்டவர்கள் சுரண்டிக்கொண்டிருப்பதாகச் சிலர் பொய்ப் பிரசாரம் புரிந்துவருகிறார்கள். இவர்களுடைய இந்த இயக்கம் அற்பத்தனமானது; முட்டாள் தனமானது. இது வெறும் பைத்தியக்காரத்தனம்."

தென்னாட்டை, வடநாட்டவர்கள் சுரண்டிக்கொண்டிருக்கிறார்கள் என்று நாம் கூறுகிறோமாம்-எனவேதான் நாம் அற்பர்களாக, முட்டாள்களாக; பித்தர்களாகக் காட்சி தருகிறோமாம் இந்தக் "கண்ணியமே உருவான கனதனவா"னின் கண்ணுக்கு!

அவர்போல ஆத்திரத்தோடு அல்ல — பணிவோடு, கடுமையான சொற்களால் அல்ல — இனிமையான வாசகங்களால், அமைச்சர் பக்தவச்சலனாரை அன்புடன் கேட்க ஆசைப்படுகிறோம், வடநாட்டு முதலாளிகளின் சுரண்டல் சக்தியால் தென்னாடு நாளுக்கு நாள் தேய்ந்து வருகிறது என்பதை மறுக்க முடியுமா அன்பர் பக்தவச்சலத்தால்?

சென்னையிலே நடைபெறுகிற தினமணி, எக்ஸ்பிரஸ், ஆந்திர பிரபா மூன்று தினசரிகளும் ஒரு வடநாட்டு முதலாளியின் ஆதிக்கப் பொருள்கள் தானே!—இதற்குப் பெயர் வடநாட்டுச் சுரண்டலா அல்லவா?

> **செங்கற்பட்டு**
> [தர்கா மைதானத்தில்]
> **திராவிட மாணவர் முன்னேற்றக் கழகப்**
> **பொதுக் கூட்டம்**
> **19-11-50 ஞாயிறு மாலை 5-30 மணி**
> **அண்ணாதுரை**
> **ஏம். சின்னையா**
> **ச. ப. அழகரசு**
> கலந்து கொள்வர்.

சென்னையிலே ஒரு பகுதிக்குப் பெயரே சௌகார் பேட்டை என்ற ஏற்படும் அளவு, அந்தப் பகுதியில் உள்ள வியாபார நிலையங்கள் முழுவதும் வடநாட்டார் கைகளில் உள்ளனவே—இதற்குப் பெயர் வடநாட்டுச் சுரண்டலா அல்லவா?

தென்னாட்டில் உள்ள வட்டிக் கடைகள் நூற்றுக்குத் தொண்ணூறுக்குமேல் வடநாட்டாரிடம்தானே உள்ளன—இதற்குப் பெயர் வடநாட்டுச் சுரண்டலை அல்லவா?

தென்னாட்டில் உள்ள பாங்கிகளில் பெரும்பாலானவை வடநாட்டுப் பாங்கிகளாகத்தானே உள்ளன—இதற்குப் பெயர் வடநாட்டுச் சுரண்டலா அல்லவா?

சென்னையிலும், பிறபல முக்கிய நகரங்களிலும் உள்ள உணவு விடுதிகளில் ஏராளமானவை, வடநாட்டு முதலாளிகளுக்குத்தானே சொந்தம் — இதற்குப் பெயர் வடநாட்டுச் சுரண்டலா அல்லவா?

தென்னாட்டில் உள்ள எத்தனையோ ஜவுளிக்கடைகள் — கிஷின் சந்த் செல்லாராம் போன்றவை—வடநாட்டு முதலாளிகளுடையவை தானே —இதற்குப் பெயர் வடநாட்டுச் சுரண்டலா அல்லவா?

பாபாலால் போன்ற நகைக்கடைகள், எண்ணற்றவை, தென்னாட்டில், வடநாட்டவருக்குச் சொந்தமாக உள்ளனவே — இதற்குப் பெயர் வடநாட்டுச் சுரண்டலா அல்லவா?

தென்னாட்டுக் கைத்தறி நெசவாளர்கள் பட்டினி கிடக்க வடநாட்டு மில் துணிகள் மூட்டை மூட்டையாக இங்கே வந்து விற்பனையாகும் சூழ்நிலை இருக்கிறதே—இதற்குப் பெயர் வடநாட்டுச் சுரண்டலா அல்லவா?

இதற்கெல்லாம் பெயர் சுரண்டல் அல்ல என்றால், சுரண்டல் என்ற சொல்லுக்குத்தான் என்ன பொருள்?

'தென்னாட்டை, வடநாட்டு முதலாளித்துவம் சுரண்டுவது கூடாது' என்று திராவிட இயக்கத்தவர்களாகிய நாம் எழுப்பும் புரட்சிக் குரலைப் பைத்தியக்காரத்தனம் என்றும், அற்பத்தனம் என்றும், முட்டாள்தனம் என்றும் ஏசுகிறாரே பக்தவச்சலனார், அவரைக் கேட்கிறோம், தென்னாட்டை

வடநாடு சுரண்டுவது கூடாது என்று நாம் வீரமுழக்கம் புரிவது பைத்தியக்காரத்தனமானல், அன்பர் பக்தவச்சலனும் அவர்தம் அருமைத் தோழர்களும், அந்தக் காலத்தில், இந்தியாவை இங்கிலாந்து சுரண்டக்கூடாது என்று இடி யோசை கிளப்பினர்களே, அதற்கு என்ன பெயர்?

இந்தியத் துணைக்கண்டத்தை பிரிட்டிஷ் தீவுகள் சுரண்டுவது தவறு என்றால், தென்னாட்டை வடநாடு சுரண்டுவதும் தவறு என்றுதானே ஏற்படும்?

இந்தியாவை பிரிட்டன் சுரண்டுவதுதான் தவறு, தென்னாட்டை வடநாடு தாராளமாகச் சுரண்டலாம்—அதிலென்ன தவறு என்று கருதுகிறாரா அமைச்சர்?

கருத முடியுமா அப்படி?

கருதினல், அது, அறிவுக்குப் பொருந்துமா?

தொடர்ந்து பேசுகையில், அமைச்சர் பக்தவச்சலனர்,

"சுரண்டல் யாரால் நடத்தப்பட்டாலும் சரி, அதை எதிர்ப்பதே நம் கடமை. தமிழர்களோ அல்லது குஜராத்திகளோ, தென் இந்தியரோ அல்லது வட இந்தியரோ, வெளி நாட்டாரோ அல்லது உள்நாட்டாரோ யார் சுரண்டினலும் சரி, சுரண்டலைத் தடுத்தே யாகவேண்டும்."

என்று குறிப்பிட்டுள்ளனர். ஆம்! தடுத்தேதான் ஆகவேண்டும். இதனை நாம் வேண்டாமென்று கூறவில்லை. குஜராத்தி தென்னாட்டை வந்து சுரண்டுவதை மட்டும்தான் தடுக்கவேண்டும், தென்னாட்டவர்கள் வடநாட்டில் சென்று சுரண்டல் தொழிலைத் தொடங்கினல் அதைத் தடுக்கக்கூடாது என்று நாம்—திராவிட இயக்கத்தவர்கள்-ஒருபோதும் கூறியதில்லை. சுரண்டல்! அந்தத் தவறான செயல் புரிபவர்களை, அவர்கள் தமிழ்நாட்டாராகவே இருந்தாலும் சரி, தடுத்துத்தான் ஆகவேண்டும்! ஆனல் உண்மை என்னவென்றால், வடநாட்டுக்காரர்கள் தென்னாட்டுக்கு வந்து, பெரும் பெரும் தொழில்களைத் துவக்கி, ஏராளமாகப் பொருள் ஈட்டி, அப்படி ஈட்டப்பட்ட தென்னாட்டுச் செல்வத்தை வடநாட்டுக்கு ஆண்டு தோறும் எடுத்துக்கொண்டு போய்விடுவதைப்போல, தென்னாட்டவர்கள் யாரும், வடநாட்டுக்குச் சென்று பெருந் தொழில்களைத் துவக்குவது

**வாணியம்பாடி**

தி. மு. க.

பொதுக் கூட்டம்

19—11—50 ஞாயிறு

மாலை 6 மணி

**இரா. நெடுஞ்செழியன்**

**சி. பி. சிற்றரசு**

**எம். பி. வடிவேலு**

சொற்பொழிவாற்றுவர்.

மில்லை. துவக்க, அந்த நாட்டவர்கள் அனுமதி தருவதுமில்லை.

சர்க்கார் உத்யோகத்தை முன்னிட்டு தென்னாட்டவர்களிற் சிலர்—அவர்கள் பெரிதும் பார்ப்பன இனத்தவர்கள்—வடநாட்டிற்குச் சென்றிருக்கிறார்களே தவிர, பெரிய அளவில், வியாபாரம் செய்ய, யாரும் போயிருப்பதாகத் தெரியவில்லை.

வடநாட்டில், ஆட்சித் துறையில், அலுவல் பார்க்கச் சென்றிருக்கும் அந்த ஒரு சில தென்னாட்டவர்களும், தங்களுடைய திங்கள் ஊதியத்தில் பெரும் பகுதியை, அன்றன்றாட வாழ்க்கைத் தேவைகளைப் பெறும் விதத்தில், அங்கேயேதான் செலவிட்டுவிடுகின்றனர். அப்படியே, அங்கிருந்து அவர்களால், தங்கள் தினசரி செலவு போக மிச்சமாகும் தொகையில் சில ரூபாய்களைத் தென்னாட்டில் உள்ள தம் பெற்றோர்களுக்கோ உற்றார்களுக்கோ அனுப்பமுடிகிறது என்று வைத்துக்கொண்டாலும், இது, மிக மிகச் சிறு தொகையாகவே இருக்கமுடியும்.

அப்படி, அவர்கள், அங்கிருந்து தென்னாட்டுக்கு அனுப்பும் சிறு தொகையோடு, தென்னாட்டில் உள்ள வடநாட்டு முதலாளிகள் வியாபாரத் துறை மூலமாக தென்னாட்டிலிருந்து வடநாட்டுக்கு எடுத்துச்செல்லும் கோடிக்கணக்கான ரூபாய்களை ஒப்பிட்டுப் பார்த்தால், வடநாட்டிலிருந்து தென்னாட்டுக்கு வரும் தொகை ஒரு கைம் மண்ணளவு இருக்கும். ஆனல் தென்னாட்டிலிருந்து வடநாட்டுக்குச் செல்லும் தொகையோ, ஒரு மலையளவு இருக்கும். அமைச்சர் பக்தவச்சலனருக்கு இந்த உண்மையில் ஐயமிருக்குமானல், இந்த உண்மைபற்றிய புள்ளி விவரங்களை அவரே தொகுத்துப் பார்த்து அவராக ஒரு முடிவுக்கு வரட்டும்—நாம் வேண்டாம் என்று கூறவில்லை.

"வடநாட்டுத் துணி விற்பனை கூடாது என்று இவர்கள் செய்யும் மறியலை, அந்தக் காலத்தில், நாங்கள், வெளிநாட்டுத் துணி விற்பனை கூடாது என்று செய்த மறியலோடு ஒப்பிட்டுப் பேசுகிறார்கள் சிலர். இந்த உவமானம் கொஞ்சமும் பொருந்தாது. ஏனெனில், நாங்கள், அந்தக் காலத்தில், வெளிநாட்டுத் துணியை யார் விற்றாலும் சரி, விற்ப-

வர் இந்தியாராகவே இருந்தாலும் சரி, அனைவர் கடை முன்னும் மறியல் செய்தோம். ஆனால் இவர்களோ வடநாட்டுத் துணியை வடநாட்டவர்களே விற்கும்போதுதான் மறியல் செய்கிறார்கள். ஆனால், அதே வடநாட்டுத் துணியை, தென்னாட்டவர்கள் விற்றால், இவர்கள் மறியல் செய்வதில்லை. எனவே இவர்கள் மறியல், வடநாட்டுத்துணியை எதிர்த்தல்ல. வடநாட்டு மக்களை எதிர்த்து!”

பக்தவச்சலனாரின் பொன்மொழிகளிலே, இது ஒன்று! இந்தப் பொன்மொழி எவ்வளவு பொருளற்ற வாதம் என்பது, இதனை ஒரு சிறிது அலசிப் பார்த்தவுடனே தெள்ளத் தெளிய விளங்கிவிடும்.

இவர் கூறுவதைப் பார்த்தால், வடநாட்டுத் துணி விற்பனையை எதிர்த்து மறியல் புரிவதில் தவறில்லை—அது மிகவும் நியாயமான செயல் என்னும் நம் கருத்தை இவர் ஏற்றுக்கொள்கிறார் என்றும், இப்போது திராவிடக் கழகத் தோழர்களால் நடத்தப்பட்டுவரும் மறியலில் இவருக்குள்ள ஆட்சேபனையெல்லாம், அந்த மறியல், வடநாட்டுத் துணியை விற்பனைசெய்யும் வடநாட்டுக் கடைமுன் மட்டும் நடத்தப்படுவதால்தான் ஏற்பட்டிருக்கிறது என்றும், அப்படியில்லாமல், வடநாட்டுத் துணியை விற்பனை செய்யும் தென்னாட்டவர் கடைகள் முன்னும் மறியல் தொடங்கப் பட்டுவிட்டால், இவருக்கு, இம் மறியல் செய்வதில் எத்தகைய ஆட்சேபனையும் இராது என்றும் அல்லவா ஏற்பட்டு விடுகிறது?

அப்படியானால், நாளை முதல், வடநாட்டுத் துணி விற்பனை மறியல், வடநாட்டவர் கடைகள் முன் மட்டுமன்றி தென்னாட்டவர் கடைகள் முன்னும் தொடங்கப் பட்டுவிட்டால், அப்போது, அந்த மறியலில்கலந்துகொள்ள, பக்தவச்சலனார் தயார்தானா? மறியலில் நேரடியாகக் கலந்து கொள்ள மந்திரிபதவி ஒருதடையாக இருந்தாலும், மறியலை ஆதரித்துப் பேசவாவது, அந்நிலையில், முன்வருவாரா அன்பர் பக்தவச்சலனார்?

இப்போது, அவர் பேசியுள்ள பேச்சு நாணயமுள்ளதானால், “ஏதாவது சொல்லி இதுகளை ஏசவேண்டும்” என்ற எண்ணத்தை முன்வைத்துப் பேசப்பட்டதாக இல்லாமல், இந்தப் பேச்சு, இருதயத்திலிருந்து வெளிவந்த இனிமையுரையாக இருக்குமானால், மறியல், எல்லாக் கடைகள்முன்னும் நடத்தப்பட்டால், அதிலே கலந்துகொள்வது அமைச்சர் பக்தவச்சலனாரின் கடமைமட்டுமல்ல உரிமையும் ஆகிறது. அந்தக் கடமையை நிறைவேற்றும் அளவு நெஞ்சுத் துணிவும், நேர்மைத் திறமும் உண்டா மராமத்து அமைச்சருக்கு?

நாமல்ல இப்படிக் கேட்பது—நாடு! என்ன விடை தர இருக்கிறார் எழிலமைச்சர் இக் கேள்விக்கு?


குருராயப் பேட்டை
(வ. ஆ)
தி. மு. க.
பொதுக் கூட்டம்
25—11—50 சனிக்கிழமை
மாலை 6 மணி
மா. இளஞ்செழியன் B. A. (Hons)
சொற்பொழிவாற்றுவார்.


பக்தவச்சலனார் தந்துள்ள இந்தப் பாகுமொழியைப் பார்த்தால், வடநாட்டுத் துணி விற்பனையை எதிர்த்து மறியல் செய்வது நியாயம் என்றல்லவா ஏற்படுகிறது! அப்படியானால், சொற்பொழிவின் இறுதியில் இப்படிப் பேசிய அமைச்சர், சொற்பொழிவின் தொடக்கத்தில், வடநாட்டுத் துணி விற்பனை மறியலைப் பைத்தியக்காரத்தனமானது — அற்பத்தனமானது — முட்டாள்தனமானது என்றெல்லாம் ஏசினாரே, அது ஏன்?

ஒரே இடத்தில் ஆற்றிய ஒரே சொற்பொழிவில், தொடக்கத்தில், வடநாட்டுத் துணி மறியலைப் பைத்தியக்காரத்தனம் என்று ஏசிவிட்டு, முடிவில், அது தான் நியாயம் என்று பேசினாரே பக்தவச்சலனார், இவ்வளவு முரண்பாடாகவா ஓர் அமைச்சர் பேசுவது—இவ்வளவு முரண்பாடாகவா? மந்திரிக் கழகு முரண்படப் பேசுதல் என்று ஏதாவது புதுமொழி வகுத்திருக்கிறாரா இப் புத்தறிவாளர்? எப்படி வந்தது இத்தகு முரண்பாடு? எப்படி வந்தது?

எப்படி வந்தது இப்படி ஒரு முரண்பாடு என்பதுகூட இருக்கட்டும் ஒருபுறம், ஒன்றுக்கு ஒன்று நேர் முரணான இந்த இரு கருத்துகளிலே, எந்தக் கருத்து அமைச்சர் பக்தவச்சலனாரின் உண்மைக் கருத்து? கூறுவாரா கூர்த்தமதி படைத்த மந்திரியார்?

**“இப்படிப்பட்ட இயக்கங்களை அடக்குவதற்குப் போதுமான அளவு நீளமும், போதுமான அளவு வன்மையும் படைத்தனவாயிருக்கின்றன சட்டத்தின் கைகள்!”**

அமைச்சர்தம் பேச்சிலிருந்து உதிர்ந்த மற்றொரு முத்து இது!

(18-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

நின்றன. ஆச்சாரிய துரோணர் அந்தணர் வழிப் பிறப்பு. அரசவை ஆசிரியராக அமர்ந்தாரென்றால் அர்ஜுனனால் அவருக்கு ஆகவேண்டிய காரியம் இருந்தது. மேலும், அரசவை சுகம் வேறு. வேடனை அவர் வெறுத்ததில் ஆச்சரியமில்லை. ஆனால், அவரால் ஏற்கப்படாத ஏகலைவன், மனம் நொந்து, காடு திரும்பினான். கிழவனின் அன்றைய சொற்கள் அவன் சிந்தனையை அடிக்கடி குழப்பின. கிழவன் கூறியபடியே துரோணர் தன் குலப்பெருமையையும், பணபலத்தையையும் எடுத்துக் காட்டிவிட்டார். இனி வேறு ஆசிரியரை அண்டுவதென்பது முடியாதது. ஆகவே அவன் வேறுவழி கண்டான். துரோணரிடம் அவன் கொண்டிருந்த அன்பு, பக்தி, அவர் வெறுத்ததினால் குறையவில்லை, வளர்ந்தது. அவர் போன்ற சிலையொன்றைச் செய்துவைத்து அதன் முன்னின்று போர்முறை பயிலத் துவங்கினான். அவன் போக்கைக் கண்டு சிரித்தனர் சிலர். "சிலை, கலையளித்து விடுமா!" என்று கேலி பேசினர் பலர். அதன் முன்னின்றால், பணிவும், வில்பிடிக்கும் முறையும் விரைவில் வந்துவிடுகின்றன என்றான் அவன். அழகியின் சித்திரம் கிடைத்தவுடன், ஆர்வத்தில், ஒருவன் நல்ல கவிதையை உருவாக்குதல் போல, துரோணர் சிலையால், ஏகலைவன், கலையில் வளர்ந்தான்.

சிலை தந்தது கல்வி என்று சொல்ல முடியாது. சோம்பித்திரிந்த ஏகலைவன் தினமும் "போர் முறை"பயில காலம் வகுத்து ஓயாது உழைத்து வந்தான். நிறைந்த உழைப்பின் பயனாக நல்ல பயனை அடைந்தான். பல கணைகளை ஒரே முறையில் செலுத்திப் பல திசைகளில் பரவச் செய்வது; ஒரே கணையால் ஓராயிரம் துளைகளை ஒரு உடலில் ஏற்படுத்துவது; இலக்கு எதிர்புறம் இருக்க, மறுபுறமாகவே நிழல் பார்த்து அதனை அடிப்பது. இவை போன்ற அநேக நுணுக்கங்கள் அவனுடைய முயற்சியால் தெரியலாயின. அவன் நிகரற்ற வல்லுநன் ஆனான்.

ஆண்டுகள் கழிந்தன. விற்போர்க்கலையின் உறைவிடமாகி விட்டான் ஏகலைவன். அவன் குறி தப்பிய இலக்குகளே கிடையாது. அந்த அளவுக்கு வளர்ச்சி. வேடுவர் குலமே வியந்தது அவன் வளர்ச்சி கண்டு. அவர்கள், அவனைப் போற்றினர். அவன், சிலையைப் போற்றினான். அதாவது துரோணரைப் போற்றினான். தனக்கு இந்தத் திறமையைத் தந்த தன் முயற்சியைப் போற்றாது, சிலைக்குக் கொண்டாட்டங்கள் நிகழ்த்தினான். துரோணர்வரவை எதிர்நோக்கினான் அவருக்கு வரிசைகள் வழங்க.

வசந்த காலம். பச்சை இலைகளோடு, நெருங்கிய மரங்களோடு, அழகிய கனிகளோடு, குளிர்தரு நிழலோடு, "மங்கை"யைப்போன்றுமாண்புற்று விளங்கிற்று வனம். மிருகங்கள் அந்தப் பருவத்தை வெறுத்தன மன்னர்கள் வரவேற்றனர். வேட்டையாடும் நாள் வந்தது எனப் பூரித்தனர். வில், வேல், வாள் கொண்டு, வேடுவர், நாய்கள் துணையோடு காடு வரத் துவங்கினர். அஸ்தினபுரமும் அவைகளில் ஒன்று.

முரசங்கள் முழங்கின. தொடர்ந்து கணைகளும், வேல்களும் வனத்தையே தம் ஓசையால் அதிரச் செய்தன. அத்தினபுர வேட்டைப்படை, "ஏகலைவன்" வாழ்ந்த காட்டில்புகுந்தது. காலம் பார்த்த வேடன், அந்தப் படையின் வருகை கண்டு மகிழ்ந்தான். என்றாலும், முன்னம் தன்னை வெறுத்தவரைப் பார்க்க அவன் விரும்பவில்லை. கோபம் என்பதல்ல. நீசனைப் பார்த்து துரோணர் மனம் நோகக்கூடாதே என்ற குரு நல அக்கறை. எனினும் அவரை வேறு வகையில் காண விருப்பங்கொண்டான்.

அன்று காலை, குளித்துத் திரும்பி, கையில் வில், கணை எடுத்து, "சிலை" யிருந்த இடம், தினமும் கலை கற்குமிடம் வந்தான் ஏகலைவன். நாயொன்று சிலையை அசுத்தம் செய்து கொண்டிருந்ததைக் கண்டான். குருவின் சிலை— அதுவும் வேதியர் உருவம். கீழ் சாதியரே அண்டமுடியாத அவரை நெருங்கி நாய் அசுத்தம் செய்வதா! அவன் உள்ளம் கொதித்தது. வில்லை எடுத்தான். கணைகள் பல தொடுத்தான். தப்பாமல் அவை அந்நாயின் வலது காலில் வரிசையாகக் குத்திக் கொண்டன. வேதனை பொறுக்காத நாய் ஓலமிட்டு ஓடியது. அவன் சிலையைச் சுத்தம் செய்து, பால் பழம் முதலியவை படைத்தான். பின்பு கலை பயிலத் துவங்கினான்.

ஓடின நாய் அர்ஜுனனை அடைந்தது. வேதனைக் குரல் எழுப்பிய அதனைக் கண்டான் அவன். அது அவனுடைய வேட்டை நாய். வரிசையாக அதன் காலில் குத்தியிருந்த கணைகள் அவனுக்கு வியப்பைத் தந்தன. தொடர்ந்து ஒவ்வொன்றாகத் தொடுத்தாலும், அவை, அம்மிருகத்தின் பல பாகங்களில் துளைத்திருக்கும். ஆனால் வரிசையாக, ஒன்றன் கீழ் ஒன்றாக, ஒன்பது கணைகள் குத்தியிருப்பது "கணைத் திறமை" உடையவனால் கையா

ளப்பட்டிருக்க வேண்டும். நாய், இகழுரையைக் கேட்க விரும்பாததாலோ, புகலிடம் தேடி வந்தும் கவனிப்பு இல்லாத காரணத்தாலோ வீழ்ந்து இறந்தது. அர்ஜுனன் ஆசிரியரைக் கூப்பிட்டான். அவரும் விரைவில் வந்தார்.

"ஏன் அர்ஜுனா?"

"சுவாமி! கண்டீரா இந்தக் காட்சியை. ஒரே காலில் ஒன்பது கணைகள் வரிசையாக...!"

"விற்போர்த் திறனுடையவனால் வீசப்பட்டிருக்க வேண்டும். இது தனுர்க்கலையில் முக்கியமான அம்சம். பலகணைகளை ஒரே சமயத்தில் ஏற்றி எய்யும் வித்தை...!"

"எனக்குக் கற்றுத் தரவில்லையே சுவாமி!"

"நீ இன்னும் பிறவற்றில் தேர்ச்சி பெறவில்லையே!"

"அப்பொழுது இவைகளை எய்தவன்?"

"வீரன்! விற்போர்க்கலையில் விவேகி! ஒரு பெரிய ஆசிரியனாகவே இருக்க வேண்டும்."

"காட்டிலா ஆசிரியன்?"

"வேட்டைக்கு வந்தவர் பலர் இருப்பார்களல்லவா?"

"வாரும் அவ் வீரனைக் காண்போம், சுவாமி!"

அந்தக் கலைஞனைக் காணும் வேட்கையில் குருவும், சீடரும் நாயின் குருதி சொட்டிய பாதை வழியாகவே போயினர். அது, "துரோணர் சிலை"யின் புறம் நெருங்கியது. சற்றுத் தொலைவிலேயே அவர்கள் ஏகலைவனைக் கண்டு விட்டனர். அதோடு சிலையையும் பார்த்து விட்டனர். துரோணர் திகைத்தார் அர்ஜுனன் அஞ்சினான். ஏகலைவன், புதுப்புது வித்தைகளைத் தன் வில்லினால் காட்டிக்கொண்டிருந்தான். "கல்வி" ஓய்ந்தபின், குருவின் சிலையடியில் சிரம் தாழ்த்தி "வழிபாட்டில" இருந்தான். அமைதியைக் கிழித்து அர்ஜுனன் மெதுவாகப் பேசினான்.

"சுவாமி! இவன் தான்...!"

"முன்னம் ஒரு முறை நம்மை அண்டியவன்"

"அதுவல்ல! நம் நாயை...!"

"வீழ்த்திய வீரன்!"

"உங்கள் சிலை வேறு....!".

"செய்து வைத்திருக்கிறான். என்னையும் அறியாமல, என் அனுமதியையும் பெறாமல் சிலை வடித்திருக்கிறான், விற் போர்க் கலையிலும் தேர்ந்திருக்கிறான். ஆக நான் இவன் குரு!"

காணிக்கை கிடைக்கும் என்ற ஆர்வத்தில், "குரு" தானெனக் கூறிக் கொண்டார் துரோணர். அந்தப் பேராசைப் பெருந்தகையின் சீடனோ, வேடனின் திறமை தன்னையும் மிஞ்சியது கண்டு பொறாமையுற்றான். பேராசையும், பொறாமையும் மீண்டும் பேசலாயின. "சுவாமி!" என்றான் அர்ஜுனன்

"என்ன?"

"அவனிடம் குருதட்சிணை!'

"கட்டாயம் கேட்பேன். பொன்னை, பொருளை நிரம்பக் கேட்பேன்!" என்று ஆர்வத்தோடு இரைந்தார் துரோணர்.

"ஆனால் என்னையும் விட வல்லவனாக....!" அர்ஜுனன் தலை கவிழ்ந்தது. குரு அவனைக் கவனித்தார்; பொறாமைக்கூடு ஆகிவிட்டான் பார்த்தன் என்று கண்டு கொண்டார்.

"விஜயா! தெரிந்தது உன் உள்ளம். பார்த்தனை விட பாரிலுள்ளோர் எவரும் பெருவீரராகஇருக்கக்கூடாது என்ற...'

"பொறாமையல்ல சுவாமி!"

"தெரியும்! எண்ணம் என்று சொல்ல வந்தேன். என் சீடன் நீ! க்ஷத்திரியன்! அரசன் மகன்! விற்போர்த் திறமை உனக்குத் தேவை. எனக்கும் வேண்டியதைத் தருவாய்! உனக்குப் புகழ் வேண்டியதுதான்....!'

'புகழை இவன் பறிப்பதா?"

"என்கிறாய். தவறு! கூடாது! வித்தையில் நீசன் உயர்வது வேடிக்கைக்குரிய செயலல்ல. விபரீதத்திற்கு வித்து. வேதியர் பரம்பரைக்கு நாசகாலத் துவக்கம். க்ஷத்திரியர் தொழிலுக்குக் களங்கம். கவலைப்படாதே! இதற்கொரு வழி செய்கிறேன்."

"அவனைக் கொல்லப் போகிறீர்களா?"

"அவனையல்ல—அவன் திறமையை."

"எப்படி சுவாமி!"

"தெரியும், என்னுடன் வா!"

அர்ஜுனன் பின் தொடர, அஞ்சாமல் முன் நடந்தார் துரோணர். கண்ட ஏகலைவன் 'சுவாமி!" என்று சாஷ்டாங்கமாக வீழ்ந்தான். அவரைத் தொழுதான். வித்தை பயிற்றுவிக்க மறுத்ததை, பழங்கதையை நினைந்தழுதான். அவர் சிலையால் உயர்ந்தது கண்டு சிரித்தான். மகிழ்ச்சியில் "கொம்பு" எடுத்து ஊதத் துவங்கினான் அவர் தடுத்தார்.

"சிஷ்யா! என்ன இது?"

சிஷ்யன் என்று அவர் சொன்னவுடன் அவன் மறுமுறையும் வீழ்ந்தான். அவர் கால்களில் தன் தலையைத் தேய்த்தான் அன்பினால். விஷ எண்ணம் கொண்டு வந்த வேதிய துரோணர் அவனை வாழ்த்தவில்லை. அவர் அர்ஜுனனைப்பார்த்தார். அவன் வெறுப்பினால் வாய் மூடியிருந்தான்.

"சுவாமி! விற்போர்க் கலையை உம்மால் கற்றேன்! உய்த்தேன். உம் மூர்த்தியின் மகத்துவம் என்னை மகாமேதையாக்கி விட்டது. என் குருவுக்குப் பரிசுகள், வரிசைகள் வாரி வழங்கப் போகிறேன்! இதோ...!"

(19-ம் பக்கம் பார்க்க)

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அலங்காரமான வாசகத்தின் உள்ளீடான பொருள் என்ன?

"திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களே! திராவிடக் கழக உறுப்பினர்களே! ஜாக்கிரதை! எங்களிடம் போலீஸ் இருக்கிறது! அதைவிடப் பல முள்ள பட்டாளமிருக்கிறது, எங்களிடம் சிறைச்சாலை இருக்கிறது-அதன் கதவுகளை இழுத்துச் சாத்திப் பூட்ட அதிகாரச் சாவி இருக்கிறது! இந்த உண்மைகளை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்! எனவே, ஆமைகளென அஞ்சி, ஊமைகளெனக் கிடந்து பிழையுங்கள்!"

இதுதானே, அந்த வாசகத்தின் பொருள்?

அன்புள்ள அமைச்சரே, ஒரு வார்த்தை தங்களிடம் போலீஸ் இருக்கிறது. தாங்கள் தங்கள் சுண்டுவிரலை அசைத்தால், அந்த அசைப்பின் போக்கிற்கேற்ப அசைந்து ஆடும் அந்தப் போலீஸ். அறிவோம் இதனை

தங்களிடம் பட்டாளம் இருக்கிறது. தாங்கள் தங்கள் கண்ணைச் சிமிட்டினால், என் என்று கேட்டபடி எழுந்தோடி வரும் அப்பட்டாளம் — அறிவோம் இதனையும்.

தங்களிடம் சிறைச்சாலைகள் இருக்கின்றன—தாங்கள் மனம் வைத்தால் விநாடி நேரத்தில் எங்களிற் பல்லாயிரவரைக் கொண்டு சென்று காராக்கிருகத்தில் அடைக்க முடியும் தங்களால். தெரிந்தே இருக்கிறோம் இதனையும்.

குண்டாந்தடி, கொடிய துப்பாக்கி, கண்ணீர்ப்புகை—மூன்றும் உண்டு தங்களிடம். தடி, உடலை நொறுக்கும். துப்பாக்கி, உயிரைப் பிரிக்கும். தெரியும் இதுவும் எங்கட்கு. தெரியும் என்றால் பிறர் சொல்லிக் கேட்டுத் தெரிந்துகொண்டதல்ல. புத்தகங்களிலே படித்துத் தெரிந்து கொண்டது மல்ல. சென்னையிலும், குன்றத்தூரிலும், நேரிலே அனுபவித்துத் தெரிந்துவைத்திருக்கிறோம்.

தங்களைப்போலவே, எங்களுக்கும், இந்த உண்மைகள் அவ்வளவும் தெரியும். ஆனால், அத்துடன், தங்களுக்குத் தெரியாத மற்றோர் உண்மையும் எங்கட்குத் தெரியும். "குண்டாந்தடி, துப்பாக்கி, சிறைச்சாலை, சட்டப்புத்தகம், மந்திரி நாற்காலி — இவை அனைத்தையும் விட பலமுள்ளது மக்கள் சக்தி." — இதுதான் அந்த உண்மை. உலக வரலாற்றிலே, ஒவ்வொரு பக்கத்திலேயும், இந்த உண்மை, பெரிய எழுத்துக்களிலே பொறிக்கப்பட்டிருக்கிறது—எப்படி அதை நாங்கள் காணாதிருக்க முடியும்? ஊராளும் பொறுப்பு ஏற்பட்டு ஓய்வில்லாமல் போய்விட்ட காரணத்தால் நீங்கள் அந்த உண்மையைக் காணாதிருக்கிறீர்கள். நாங்கள் எப்படி அதைக் காணாதிருக்கமுடியும்?

* * *

தூற்றல்
ஆத்திரம்
ஆவேசம்
முரண்பாடு
மிரட்டல்


## குன்னூர்

தி. மு. க.

**பொதுக் கூட்டம்**

19—11—50 ஞாயிறு

மாலை 5-30 மணி

**காஞ்சி கல்யாண சுந்தரம்**

சொற்பொழிவு


இத்தனைத் திருக்கல்யாண குணங்களும் நிறைந்திருக்கின்றன நாடாள வந்திருக்கும் நல்லறிவாளர் உயர்திரு பக்தவத்சலம் அவர்களின் பொன்னான பிரசங்கத்தில்!

சுற்றிவளைத்துப் பேசுவானேன்? சுருக்கமாகவே கூறி முடித்துவிடுகிறோம். இத்தலையங்கத் துவக்கத்திலே கூறப்பட்ட ஜமீன்தாரின் நிலையிலே இருக்கிறது காங்கிரஸ் என்னும் உண்மையை எழில்பட விளக்கும் எண்ணற்ற எடுத்துக்காட்டுகளில் ஒன்றுதான், அமைச்சர் பக்தவச்சலனார், சென்னையில், சென்ற கிழமை நமக்கெல்லாம் அளித்துள்ள இந்த அறிவுரைக் கொத்து!

## ஏஜண்டுத் தோழர்கட்கு!

### முக்கிய அறிவிப்பு

அடுத்த வாரம்முதல், "போர்வாள்", வியாழக்கிழமையன்றே இங்கிருந்து அனுப்பப்பட்டு எல்லா ஊர்களிலும் வெள்ளிக்கிழமையன்று கிடைக்கும். பத்திரிகையைத் தபால் மூலம் பெறும் ஏஜண்டுகள் தபால் நிலையத்திற்கும், ரயில் மூலம் பெறும் ஏஜண்டுகள் ரயிலடிக்கும் சென்று, வெள்ளிக்கிழமையன்றே பார்சல்களைப் பெற்றுக் கொள்ள வேண்டுகிறோம்.

மேனேஜர்

போர்வாள்.

(17-ம் பக்கத் தொடர்ச்சி)

மறுமுறையும் அவன் வாய் கொம்பிடத்தில் சென்றது. அவர் தடுத்தார், ஆட்கள் வந்தால் தன் கபடநாடகம் நிறைவேறாதே என்ற எண்ணத்தில்.

"சிஷ்யா!"

"ஏன் சுவாமி! ஆட்களை அழைக்கிறேன், அரியணை போட, உரியவை வழங்க, இன்சுவை யளிக்க."

"இல்லை—நான் அவை பெற வரவில்லை."

"ஏன் சுவாமி! தட்சிணை ஏற்கீரா! நான் சிலாரூப மமைத்து சேவித்தது தவறு? சொல்லுங்கள் சுவாமி!"

"தவறு இல்லை. தட்சணையாக நான் கேட்கப் போவது...!

"எதுவேண்டுமானாலும்கூறுங்கள் காட்டைக் கேளுங்கள். அதனை நாடாக்க நானும் என் ஆட்களும் உள்ளோம். இன்னும்...."

"பொறு! நான் கேட்கப்போவது உன் உயிருக்கே......!"

"சொல்லுங்கள் சுவாமி! முத்தா? பவளத்தீவு சென்று பவளம் பறிக்கவா! சுரங்கம் நுழைந்து தங்கம் அன்றி பாம்புப் புற்றில் கைவிட்டு நாகமணி எடுக்கவா...! உயிரையே கேட்கினும் தருகிறேன் சுவாமி!"

"வேண்டாம்-உன் கண்கள்!'

"கேளுங்கள் சுவாமி! கணை பிடிக்க கையிருந்தால் போதும்!"

"கண் வேண்டாம்! உன் கையை......!"

"தாராளமாக! தயங்காமல் ஏற்றுக் கொள்ளும்!"

"கை வேண்டாம்! அது பெரிய அங்கம். அந்த வலது கை கட்டை விரலை...!"

கணை எடுத்து, நாணோடு சேர்த்துக் குறிபார்த்து எய்ய உதவும் கட்டை விரலைக் கேட்டு விட்டார் துரோணர். வஞ்சக உருவம், தன் நச்சுப் பேச்சால் பஞ்சமனை வாழவைக்காத விரலைக் கேட்டு விட்டது. அர்ஜுனன் மகிழ்ந்தான். ஏகலைவன் இச் சூதை யறியவில்லை. சூழ்ச்சியும், சுயநலமும் சேர்ந்து சுத்த வீரனைக் கெடுக்கிறது என்று அவன் உணரவில்லை. வாள் எடுத்தான். துரோணர் தடுக்கவில்லை ஓங்கினான் மறுக்கவில்லை வீழ்த்தினான். வேண்டாமென்று சொல்லவில்லை. விரல் தெறித்து விழுந்தது. அதற்குப் பதிலாக "ஹஹ்......ஹஹ்...ஹஹ்..... ஹா!" என்ற கோரச் சிரிப்பு, சூத்திரர் வாழ்வுக்கு ஓர் அபாய அறிவிப்பு! வனத்தை, "பார்ப்பன வெற்றி" ஓசையால் நிறைத்தது.

இரத்தம் பீறிட, கண்களில் கண்ணீர் பெருகிட, நா, தடுமாற "சுவாமி! என் காணிக்கை!" என்றான் வேடுவன்.

துரோணர் அவன் விரலையும் மதியாது சென்றார். வேகமாக நடந்தார்.

"காணிக்கை! காணிக்கை! ஏற்றுக் கொள்ளும்! உம் கையில் எடுத்துச் செல்லும்! அப்பொழுதுதான் நான் மன அமைதி பெறுவேன்!!' என்று ஏகலைவன் தொடர்ந்து ஓடினான்.

அவனுடைய அழுகை, வனத்தை வேதனைக்காடு ஆக்கியது.

"விரலிழந்த வேடனின்" பின்னைய வாழ்க்கை ஏக்கக் கதையாக இருந்திருக்குமே தவிர, பூஞ்சோலையாக இருந்திருக்காது. "குருபக்தி" அவனுக்கிருந்தது. அவனுடைய குருகுரோதத்தின் உருவம், சாதியில் தாழ்வுடையோன் கலையில் உயர்வதாஎன்ற கொடிய எண்ணம் அவருக்கு! பாவம்! ஏகலைவன் ஆரியரின் சூதுக்குப் பலியானான்! இது போலப் பலியானோர் இன்னும் எத்தனை பேரோ யார் அறிவார்!

---

## தி. மு. கழகம்

### புதிய கிளை

15—11—50 அன்று வ. ஆ. மாவட்டம் குருவாயப் பேட்டையில் தி. மு. க. கிளை நிறுவப்பட்டது. அவ்வமயம் கீழ்க்கண்ட செயல் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

செயலாளர்:— மெ. ச. கோபாலன். துணைச் செயலாளர்:— பா. கோ. குப்புசாமி பொருள் உறுப்பினர்: அ. கு. மு. ஏழுமலை, வி. உறுப்பினர்: செ. முருகேசன், கி. அ. சுப்பிரமணியன். குழு உறுப்பினர்கள்:— தோழர்கள் செ. மா. சிதம்பரம், கா. அ. முனிசாமி, கொ. த. சுப்ரமண்யன், கு. கி. இராமசாமி, கா. மு. தேசப்பன்.

---

### தி. மு. க கிளைக் கழக துவக்க விழா

25—11—50 மாலை சித்தூர் மாவட்டத்திலேயே முதன் முதலாக திருத்தணிகையில் திராவிட முன்னேற்றக் கிளைக் கழகத் திறப்பு விழா. தோழர். ஈ. வி. கே. சம்பத் அவர்களால் நடைபெறும். புலவர். மா. நன்னன் அவர்களும் இவ்விழாவில் கலந்து கொள்வார்கள்.

# சிறந்த சிந்தனைச் சித்திரங்கள்!

## இராதாமணாளன் இயற்றியவை

| | ரூ. அ. |
|---|---|
| மனப்புயல் | 1 8 |

எழிலும் சுவையும் மிக்க எழுத்தோவியம். இனிய தமிழ் நடையில் அமைந்த அரிய நவீனம். கண் கவரும் மூன்றுநிற அட்டை. 200 பக்கங்கள்.

பொற்சிலை 1 0

ஆரிய சூழ்ச்சி, அழகு தமிழ்ச் சுவடிகளை அழித்தொழித்த அந்த நாள் வரலாற்றை மூலப் பொருளாகக் கொண்டு இயற்றப்பட்டிருக்கும் சிறந்த கற்பனைச் சித்திரம்.

இன்பக் கனவு 0 8

பகுத்தறிவுச் சூரணத்தைச் செந்தமிழ்த் தேனில் குழைத்தெடுத்து, இன்பம் எனும் வட்டிலில் வைத்து, நாம் உண்ணத் தருகிறார் இராதாமணாளன் இந் நூலில். அழகிய இரண்டாம் பதிப்பு.

ருஷ்ய நாட்டழகி 0 8

சுவை ததும்பும் காதல் கதைகளின் தொகுப்பு. இன்பமா—துன்பமா—வீரமா—வேதனையா—எல்லா உணர்ச்சிகளும் பின்னிக் கிடந்து எழில் பரப்பும் ஏடு.

| | |
|---|---|
| பேசும் பிணம் | 0 8 |
| மயானத்தில் முத்தம் | 0 8 |
| பெண் | 0 8 |
| அய்யோ கடவுளே! | 0 3 |
| மதம் அவசியமா? | 0 8 |

## ஆசைத்தம்பி இயற்றியவை

| | |
|---|---|
| கொலைகாரி | 0 12 |
| வாழ்க்கை வாழ்வதற்கே | 0 12 |
| இருண்ட வாழ்வு | 0 8 |

## கருணாநிதி இயற்றியவை

| | |
|---|---|
| தூக்குமேடை (நாடகம்) | 1 4 |
| பெரிய இடத்துப் பெண் | 0 8 |
| தப்பிவிட்டார்கள் | 0 8 |
| கோவையில் கருணாநிதி | 0 8 |
| தலைமை உரை | 0 2 |
| அறப்போர் | 0 3 |

## காஞ்சி கல்யாண சுந்தரம் இயற்றியது

இலட்சியவாதி அழகிரிசாமி 0 5

தன் சொற்கள் எனும் வெடிகுண்டுகளை வீசி வைதீகக் கோட்டைகளைத் தவிடு பொடியாக்கிய அறப்போர் வீரர் அழகிரிசாமியின் வாழ்க்கை வரலாறு. ருசிகரமான நிகழ்ச்சிகள், ஏராளம், இந் நூலில்!

## அண்ணாதுரை சொற்பொழிவுகள்

அண்ணா கண்ட தியாகராயர் 0 4

திராவிடத் தந்தை தியாகராயரின் சிறப்பான பணியைத் தெளிவாக விளக்கும் அறிவுரைக் கொத்து.

சமுதாயப் புரட்சி 0 4

மே தினத்தின் கருத்து யாது என்பதை இனிது எடுத்துரைக்கும் சொற்பொழிவு.

| | |
|---|---|
| நாடும் ஏடும் | 0 6 |
| நல்ல தீர்ப்பு | 0 4 |
| விதிக்கு அடிமைத்தனம் | 0 2 |
| ஜனநாயகம் | 0 2 |

## பிற நூல்கள்

| | |
|---|---|
| திராவிடம் என்றால் என்ன | 0 6 |
| ஆரியத்தால் விளைந்த கேடு | 0 6 |
| பெண்கள் போராட்டம் | 0 6 |
| உலக நாகரிகத்தில் தமிழர் பங்கு | 0 8 |
| புரோகிதர் ஆட்சி | 0 8 |
| பெண்கள் புரட்சி | 0 14 |
| திராவிட இந்தியா | 1 0 |
| இராமாயணம் நடந்த கதையா | 0 3 |
| திருக்குறள் மூலம் | 0 4 |
| ஷை 5 படிகள் | 1 0 |

**பகுத்தறிவுப் பாசறை,** பவழக்காரத் தெரு, சென்னை 1.

Edited, Printed and ublished bY P. C. Manickavachagam alias Kanchi Manimoliyars Free Printers 147, C al Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A.(Hon)